# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர்: 14 இதழ் 8 ஜுலை, 1962 விலை: சதம் 15



## அட்டைப்படம்



மகா தேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவ அவர்கள் ஐந்தாவது பாராளுமன்றத்தின் மூன்றுவது கூட்டத் தொடரைப் பாராளுமன்றத்தின் இரு சபை உறுப்பினர்கள், வெளி நாட்டு ஸ்தானீகர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆதியோர் முன்னிலையில் ஜூலை மாதம் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்கள். மகா தேசாதிபதியின் மனைவி திருமதி. கோபல்லவ, மகா தேசாதிபதியின் பக்கத்தில் வீற்றிருந்தார். இலங்கையில், மகா தேசாதிபதி ஒருவர் இவ்வைபவத்தின்போது அந்நியரின் ஆட்சிக்காலத்தில் தரிக்கப்பட்ட ஆடம்பரமான ஆடை ஆபரணங்களைத் தவிர்த்து, தேசிய உடை தரித்தது இதுவே முதற் தடவையாகும்.

சிம்மாசனப் பிரசங்கத்தைப் பிரதம மந்திரி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் சம்பிரதாய பூர்வமாக மேன்மை தங்கிய மகா தேசாதிபதி அவர்களிடம் சமர்ப்பிப்பதை அட்டைப்படம் சித்தரிக்கின்றது.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சிம்மாசனப் பிரசங்கம் | 3 |
| 2. | அரசினர் புதிய கைத்தொழில் திட்டங்கள் | 8 |
| 3. | நவாலியூர் சோமசுந்தரப் புலவர் | 10 |
| 4. | புலவர் புஷ்பாஞ்சலி | 13 |
| 5. | வாழ்த்துப்பா | 14 |
| 6. | புதியன புகுதல் | 15 |
| 7. | விபுலானந்த அடிகள் | 17 |
| 8. | இலங்கைக் குறவர் திருமணம் | 20 |
| 9. | தேவபாணி | 27 |
| 10. | சோதிட நிலையம் நிறுவுக | 28 |
| 11. | மதிப்புரை | 29 |


R 4120—5,608 (8/62)

# சிம்மாசனப் பிரசங்கம்

பாராளுமன்றத்தின் மூன்ருவது கூட்டத்தின் கால எல்லேக்குள் இராணுவ சேவைகள் புனரமைக்கப்படும்; சிவில் சேவை நீக்கப்படும்; ஒருமுகப்படுத்தப்பட்ட நிர்வாக சேவை நிறுவப்படும். புதிய நிர்வாக நிதிப் பிரமாணங்கள் விரைவில் புகுத்தப்படும்.

அரசாங்க நிர்வாகத்திலும், நீதி மன்றங்களிலும் அரசகரும மொழிச்சட்டத்தைச் செயற்படுத்தும் கொள்கை தீவிரமாக அமுல் நடத்தப்படும்.

ஜுலே மாதம் 11 ம் திகதி காலே 9.30 மணிக்கு மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவ ஐந்தாவது பாராளுமன்றத்தின் மூன்ருவது கூட்டத் தொடரைப் பாராளுமன்றத்தின் இரு சபை உறுப்பினர்கள், வெளிநாட்டு ஸ்தானிகர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் முன்னிலேயில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைத்து, வாசித்த சிம்மாசனப் பிரசங்கத்தில் மேற்கண்ட அம்சங்கள் அடங்கியுள்ளன.

மகா தேசாதிபதியின் மனேவி திருமதி கோபல்லவ, மகா தேசாதிபதியின் பக்கத்தில் வீற்றிருந்தார். இலங்கையில் மகாதேசாதிபதி ஒருவர் இவ்வைபவத்தின் போது அந்நியரின் ஆட்சிக் காலத்தில் தரிக்கப்பட்ட ஆடம்பரமான ஆடை ஆபரணங்களேத் தவிர்த்து தேசிய உடையைத் தரித்தது இதுவே முதற் றடவையாகும்.

சிம்மாசனப் பிரசங்கத்தைப் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் சம்பிரதாய பூர்வமாக மகாதேசாதிபதி அவர்களிடம் கையளித்தார். இப்பிரசங்கத்தை சிங்கள மொழியில் வாசித்த பின் மகா தேசாதிபதி அவர்கள் அதை பிரதம மந்திரியிடம் திருப்பிக்கொடுத்தார். அதன் பின் இப்பிரசங்கம் தமிழிலும் ஆங்கிலத்திலும் வாசிக்கப்பட்டது.

சிம்மாசனப் பிரசங்கம் பின்வருமாறு :—

செனெற்றுச் சபைத்தலேவர் அவர்களே! செனெற்றுச்சபை அங்கத்தினர்களே!

சபாநாயகர் அவர்களே! பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களே!

காலஞ் சென்ற பிரதம மந்திரி திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களின் தலேமையில் ஆரம்பமான சோஷலிச சமுதாயத்தை அடைவதில் மக்கள் ஈட்டிக் கொண்ட வெற்றியின் பலாபலன்களே அவர்கள் அநுபவிக்காதவாறு திட்டமிட்டுச் செய்யப்படும் தாக்குதல்களே எதிர்ப்பதில் கண்ணுங் கருத்துமாகச் செயலாற்ற வேண்டும். திரு. பண்டாரநாயக்கா அவர்கள் படுகொலே செய்யப்பட்டதைக் கொண்டும், கடந்த பாராளுமன்றக் கூட்டக் காலத்தில் செய்யப்பட்ட புரட்சிச் சதியைக் கொண்டும், இனியும் வாளா இருப்பதற்கு அவகாசமில்லே என்ற அரிய படிப்பினே கிடைத்துள்ளது. எங்கள் நாடு ஜனநாயக சோஷலிசத்தை நோக்கி முன்னேறி வருவதற் கெதிராக, பிற்போக்குவாதிகள் எந்த விதமான நாச வேலேகளேச் செய்யமுயன்றபோதிலும் அவற்றை வேரோடு களேந்தெறிய எனது அரசாங்கமும் மக்களும் விழிப்புடனும் தயாராகவும் இருத்தல் வேண்டும். காலஞ் சென்ற திரு. பண்டாரநாயக்கா அவர்கள் வகுத்த சோஷலிசத்துக்கான நடுவழியைப் பின்பற்றி, மலர்ந்த வாழ்வை நோக்கி மக்கள் தங்குதடையின்றி முன்னேறக்கூடியதாக, அவர்கள் அடைந்துள்ள வெற்றியை ஸ்திரப்படுத்தி, மேன்மேலும் வளர்ப்பதே எதிர்வரும் வருடத்தில் எனது அரசாங்கத்தின் தலேயாய கடமையாய் இருத்தல் வேண்டும்.

மக்களின் நன்மைக்காகவும் முன்னேற்றத்துக்காகவும், சட்டம், சமாதானம், ஒழுங்கு ஆகியவற்றை எனது அரசாங்கம் நிலேநாட்டும். வல்லரசுக் கோஷ்டிகளுடன் சேராது நடுவுநிலேமை வகிக்கும் எனது அரசாங்கத்தின் கொள்கை வெளிநாடுகளில் பெருமதிப்பைப் பெற்று வருகின்றது. இதர அரசாங்கங்களுடன் எனது அரசாங்கம் நட்புறவைத் தொடர்ந்து நாட்டி வருகிறது. கடந்த பாராளுமன்றக் கூட்டக் காலத்தில் இதர பல நாடுகளுடன இராஜீயத் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன.

எமது வியாபாரத்தை விருத்திசெய்யவும் உல்லாசப் பிரயாணிகள் இந்நாட்டுக்கு வருவதை ஊக்குவிக்கவும் தேவையான சகல நடவடிக்கைகளேயும் எடுத்துக்கொள்ளும்படி வெளிநாடுகளிலுள்ள எங்கள் தூதுவராலயங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்படும்.

இலங்கைவாழ் இந்திய வம்சாவளியினர் பற்றிய பிரச்சினேயைத் தீர்த்தற்கு உத்தியோக பூர்வமான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவை இப்பாராளுமன்றக் கூட்டக் காலத்தில் இந்திய

பிரதம மந்திரிக்கும் எனது பிரதம மந்திரிக்கும் இடையில் தொடர்ந்து நடாத்தப்படும். பாராளுமன்றத்தின் இரு சபைகளிலிருந்து, தெரிவு செய்யப்பட்ட குழுவினுல் ஒரு குடியரசு அரசாங்கத்தைத் தாபிப்பதற்கான அரசியல் திருத்தங்கள் பரிசீலனை செய்யப்படும். ஐக்கிய இராச்சியம் ஐரோப்பியப் பொதுச் சந்தையில் பிரவேசித்ததனுல் இந்நாட்டின் வியாபாரத்துக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்களை எனது அரசாங்கம் ஆழ்ந்த சிரத்தையுடன் பரிசோதனை செய்து வருகிறது.

கடந்த கூட்டக் காலத்தில் இதரநாடுகளுடன் பல வியாபார கொடுப்பனவு உடன்படிக்கைகள் செய்யப்பட்டுள்ளன.

### ஒன்றுபடுத்திய நிர்வாகசேவை

இக்கூட்டக் காலத்தில் முப்படைகளும் புனருத்தாரணஞ் செய்யப்படுவதுடன், சிவில் சேவை ஒழிக்கப்பட்டு, இதற்குப் பதிலாக ஒன்று படுத்திய நிர்வாக சேவை தாபிக்கப்படும். புதிய நிர்வாக, நிதிப் பிரமாணங்கள் விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

சர்வதேச சந்தையில் ரப்பர், தெங்குப் பொருட்களின் விலைகள் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வந்த போதிலும், உற்பத்தியையும் ஏற்றுமதிகளையும் அதிகரித்து இறக்குமதிகளைக் குறைத்துக்கொள்ளுவதற்கு எனது அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் வியாபாரக் கணக்கில் ஏற்பட்ட பற்றுக்குறையை குறிப்பிடத்தக்க அளவு குறைத்துக் கொள்வதில் வெற்றியீட்டியுள்ளன. இறக்குமதிக் கொள்கையை இடையருது பரிசீலனை செய்ய வேண்டிய நிலைமை எனது அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

எனது அரசாங்கத்தின் இறக்குமதிக் கட்டுப்பாட்டுக் கொள்கை, பொதுமக்களுக்கு ஓரளவு வசதியீனத்தை ஏற்படுத்தியபோதிலும், நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்தற்கான புதிய கைத்தொழில்களை நிறுவுதற்கும், ஏற்கெனவேயுள்ள கைத்தொழில்களின் உற்பத்தி அளவை அதிகரிப்பதற்கும், பெரிதும் ஊக்கமளித்துள்ளது.

1962 ஆம் ஆண்டு ஜூன் முடிவுவரை, கைத்தொழில் நிலையங்களை நிறுவுதற்கான 113 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு அடுத்த இரண்டு வருடகாலத்தில் தனியார் துறையில் ஆறு கோடி ரூபா முதலீடு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கப் பகுதிகளும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் அரசாங்க நிதிகளை விரயஞ் செய்தலையும் துஷ்பிரயோகம் செய்தலையும் நீக்கிவிட நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும். அரசாங்கச் சொத்து (குற்றங்களை உடனடி விசாரணை செய்து தீர்ப்புக் கூறல்) மசோதா எனப்படும் நடவடிக்கையைப் பரிசீலனை செய்யும்படி நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுவீர்கள்.

அரசாங்கத்துக்கும் அரசாங்கசேவைத் தொழிற்சங்கங்களுக்குமிடையில் ஒத்துழைப்பு அதிகரிக்கக்கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### மூன்று வருடத்திட்டம்

பத்து வருடத் திட்டத்தின் குறிக்கோள்களுக்கு அமைய மூன்று வருட காலத்தில் மேற்கொள்ளப்படுத்தற்கான குறுகிய கால பொருளாதார அபிவிருத்தித் திட்டம் உங்கள் பரிசீலனைக்காக அண்மையில் உங்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படும்.

உள்ளூர் அதிகார நிலையங்களின் அரசிறை சம்பந்தமான பிரச்சினைகள் பரிசீலனை செய்யப்படும். வீடமைப்புத் திட்டம் மேலும் துரிதப்படுத்தப்படும்.

ஒரு புதிய வரிவிதிப்பு மதிப்பீட்டு மசோதாவை உங்கள்முன் சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தல ஆட்சிப் பிரதேசங்களிலுள்ள சொத்துக்களை சீராகவும் நவீன முறையாகவும் மதிப்பிடுவதற்கு இம்மசோதா உதவிபுரியும். மேலும், தரப்படுத்திய முறையில் வரி விதிக்கவும், ஐந்து வருட காலத்துக் கொரு முறை மதிப்பீடுகளைக் கட்டாயமாகத் திருத்தவும் இதில் ஏற்பாடுகள் சேர்க்கப்படும்.

### கல்வித்துறை

கல்வித்துறையில் செய்ய வேண்டிய மாற்றங்கள் தேசீயக் கல்விக் கொமிஷனதும், தொழில்நுட்பக் கல்விக் கொமிஷனதும் முடிவான அறிக்கைகள் கிடைத்த பின்னர் செய்யப்படும். மூன்று பல்கலைக் கழகங்களும் இயங்கும் முறையினை ஆராய ஒரு கொமிஷன் நியமிக்கப்பட்டு வருகிறது.

இஞ்சினியர்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினைச் சமாளிக்க இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் உயர்தர தொழில் நுட்பவியல் வகுப்பு நிறுவப்படும். பேராதனையில் இரண்டாவது வைத்திய கல்லூரிக்குத் தேவையான கட்டடங்கள் நிறுவப்பெற்று வருகின்றன.

விண்ணப்பக் கோடுகளின் நியாயாதிக்க எல்லையை விஸ்தரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

காலஞ் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களின் படுகொலை யோடு சம்பந்தப்பட்ட அரசியல் அம்சங்கள்பற்றி விசாரணை செய்வதற்கு நியமனஞ் செய்யப்பட்ட கொமிஷன் விரைவில் செயலாற்றத் தொடங்கும்.

பிரிவினைச் சட்டம், ஈட்டுச் சட்டம் ஆகியவற்றைத் திருத்துவதற்கான மசோதாக்களைப் பரிசீலனை செய்யும்படி நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுவீர்கள்.

**சபாநாயகர் அவர்களே ! பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களே !**

அடுத்த நிதி வருடத்துக்கான வரவு செலவுத் திட்டம் உங்கள் முன்பு சமர்ப்பிக்கப்படும்.

**தலைவர் அவர்களே ! செனெற்றுச்சபை அங்கத் தினர்களே !**

**சபாநாயகர் அவர்களே ! பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களே !**

விவாகங்கள், விவாக விவகாரங்கள் சம்பந்தமான சட்டத்தைத் திருத்தித் திரட்டுதற்கும், விவாகப்பதிவுச் சட்டத்தை நீக்குதற்குமான ஒரு மசோதா உங்கள் முன்பு சமர்ப்பிக்கப்படும். கைத்தொழில்களை ஒழுங்குபடுத்துதற்கான நியமன அலுவலகம் நிறுவுதற்கும், தீப்பெட்டி உற்பத்தி சம்பந்தமான சட்டத்தைத் திருத்துதற்கும் மசோதாக்கள் சமர்ப்பிக்கப்படும்.

### அரச கருமமொழி

**அரசாங்க நிர்வாகத்திலும் நீதிமன்றங்களிலும் அரசகரும மொழிச் சட்டத்தை அமுல் நடாத்துதற்கான தீவிரக் கொள்கை மேற்கொள்ளப்படும்.**

### கூட்டுறவு இயக்கம்

எனது அரசாங்கம கடந்த இரண்டு வருட காலத்தில் மேலதிகமான பொறுப்புக்களை அளித்துள்ள கூட்டுறவு இயக்கம், தனது நடவடிக்கைகளை மேன்மேலும் விஸ்தரித்துக் கொள்ளும். இப்புதிய பணியில் இவ்வியக்கத்தை வழி நடாத்தக்கூடிய தன்னலமற்ற கூட்டுறவுத் தலைவர்களின் சேவைகள் அதற்குத் தடையின்றிக் கிடைக்குமென எனது அரசாங்கம் நம்புகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தமான சட்டத்தை ஒருங்கு திரட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனது அரசாங்கம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இன்சூரன்ஸ் கூட்டுத்தாபனம் ஆகியவற்றை மக்களுக்கு இன்னும் கூடுதலான சேவை செய்யும் கருவிகளாக இயங்கச் செய்யும்.

பெற்றோல் கூட்டுத்தாபனம் தனது அலுவலை ஆரம்பித்துள்ளது. கடல் மூலம் சரக்குகள் கொண்டு செல்லும் தொழிலிற் பிரவேசிப்பதற்கு விரைவில் கப்பல் போக்குவரத்து கூட்டுத்தாபனத்தை நிறுவ எனது அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

### துறைமுக அபிவிருத்தி

கொழும்புத் துறைமுகம் மேலும் அபிவிருத்தி செய்யப்படும். உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த அபிவிருத்தி சம்பந்தமாக ஆலோசகர் தாபனம் ஒன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. காலித் துறைமுகத்துக்கான சிறிய அபிவிருத்தித் திட்டமும் திருப்திகரமான முறையில் முன்னேற்றம் அடைந்து வருகிறது. காங்கேசன்துறையை ஒரு கப்பல் துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

தேச மக்களுக்கு மேலதிக, சிறந்த வைத்திய வசதிகளை எனது அரசாங்கம் தொடர்ந்து அளித்துவரும். நம் நாட்டின் மரண வீதமே கடந்த ஆண்டில் தென்கிழக்காசியாவிலே மிகக்குறைந்ததாகும்.

### ஆயுர்வேத அபிவிருத்தி

விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவிருக்கும் புதிய ஆயுர்வேதச் சட்டம், ஆயுர்வேதத்துக்கு ஒரு விசேட அந்தஸ்தையும் கௌரவத்தையும் அளித்துள்ளது. ஆயுர்வேதம் பற்றிய ஓர் ஆராய்ச்சி நிலையம் விரைவில் நாவின்னையில் ஆரம்பித்து வைக்கப்படும். ஆயுர்வேத மருந்து உற்பத்திச்சாலை ஒன்றை நிறுவுதற்கான வேலை ஆரம்பிக்கப்படும்.

நவீன ஜெற் விமானங்கள் இறங்குதற்கான வசதிகளை அளிக்கக் கூடியதாக கட்டுநாயக்க விமான நிலையம் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது. அந்நிய நாட்டு உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்வேலை தொடர்ந்து நடைபெறும்.

கொழும்பு நகரில் தபால் தந்திச் சேவைகளில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியைச் சமாளிக்க ஒரு புதிய மத்திய தந்திக் கந்தோர், தபால் வகைப்படுத்தும் கந்தோர் ஆகியவற்றுக்கான கட்டட வேலை நடைபெற்று வருகிறது.

புத்தளப் புகையிரத இருப்புப் பாதை மீண்டும் அமைக்கப்படுகிறது. இது இரண்டாவது சீமெந்து தொழிற்சாலைக்குப் பயன்படக் கூடியதாக அறுவாக்கலுவரை நீடிக்கப்படும் இத்தொழிற்சாலையில் வேலை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

### விவசாய அபிவிருத்தி

நெற்காணிச் சட்டம் இலங்கையிலுள்ள சகல மாவட்டங்களிலும் நடைமுறைக்குக் கொண்டுவரப் படும். நெல் உற்பத்தியை அதிகரித்தற்கும் வாரக் குடிகளின் நலவுரிமையைப் பாதுகாத்தற்குமான சிறந்த கருவியாக அமையும் பொருட்டு இச்சட்டம் திருத்தப்படும். பயிர் இன்சூரன்ஸ் திட்டம் செம்மைப் படுத்தப்படும். விவசாயக் கடன் உதவி முறை கமக் காரர் தாராளமாகக் கடன் பெறக்கூடியதாகத் திருத் தப்படும். சிறிய நீர்ப்பாசன வேலைகளைப் புனருத் தாரணம் செய்வதிலும் விருத்தி செய்வதிலும் கூடு தலான சிரத்தை எடுத்துக்கொள்ளப்படும்.

### கட்டிப்பால் தொழிற்சாலை

கட்டிப்பால் தொழிற்சாலை யொன்றும், மேலதிக மான பூரண சத்துள்ள பால் மாவாக மாற்றக் கூடிய ஒரு தொழிற்சாலையும் நிறுவப்படும். இப் போது பால் இறக்குமதி செய்வதில் விரயமாகும் பெருமதியான வெளிநாட்டுச் செலவாணியை மிச்சம் பிடித்தற்கு இந்த நடவடிக்கைகள் உதவியாக இருக் கும்.

### தோட்டக் கூட்டுத்தாபனம்

ஆரம்பத்தில் தனது ஆயிரம் ஏக்கர் தோட்டத்தை அண்மையில் பெறவிருக்கும் அரசாங்கத் தோட்டக் கூட்டுத்தாபனம், அரசாங்கம் பெற்றுள்ள தோட்டங் களைப் புனருத்தாரணஞ் செய்வதுடன் அடுத்த வரு டத்தில் இதே அளவுள்ள மூன்று புதிய தோட்டங் களிலும் வேலையை மேற்கொள்ளும். மேட்டுநிலத் திட்டங்களின்படி குடியேற்றக்காரர்களின் நன்மைக் காக இரண்டு தேயிலைத் தொழிற்சாலைகள் நிறுவப் பட்டு வருகின்றன. இவை போன்ற மூன்றாவது தேயிலைத் தொழிற்சாலை நிறுவும் வேலை சமீபத்தில் ஆரம்பமாகும்.

தனியார்துறையுடன் சேர்ந்து உடனடியாகத் தயார் செய்யக்கூடிய தேநீர் உற்பத்தித் தொழிற்சாலை யொன்று நிறுவப்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலை இப்பாராளுமன்றக் கூட்டக்காலத்தில் உற்பத்தி செய் யத் தொடங்கும்.

வனத் தொழில் ஒன்றை நிறுவும் நோக்கத்துடன் மீண்டும் வனமாக்கும் திட்டம் துரிதப்படுத்தப்படும். ஐக்கிய நாடுகளின் தொழில் நுட்ப உதவித்திட்டத் தின் ஒத்தாசையுடன் எமது வனவளங்களை ஆராயும் வேலையை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### கடற்றொழிற் பயிற்சி

நவீன முறைகளில் உள்ளூர் கடற்றொழிலாளருக் குப் பயிற்சி அளித்தற்காக நீர்கொழும்பில் கடற் றொழிற் பயிற்சிப் பாடசாலையொன்று நிறுவப்பட் டுள்ளது. காலியில் ஒரு புதிய மீன்பிடித் துறை முகம் நிறுவப்பட்டு வருகின்றது. விரைவில் கூடுத லாகப் பல மீன்பிடிக் கப்பல்கள் வாங்கப்படவிருப்ப தால் மூகத்துவார மீன்பிடித் துறைமுகம் விருத்தி செய்யப்படுகின்றது. ஆழ்கடல் மீன்பிடித் தொழிலை ஒழுங்கான முறையில் அமைக்க உத்தேசிக்கப்பட் டுள்ளது.

1964 ஆம் ஆண்டு பூர்த்தியாகவிருக்கும் லக்ச பான நீர் மின் திட்டத்தின் IIB கட்ட வேலை முன் னேற்றமடைந்துள்ளது. எனவே மஸ்கேலியா பள்ளத் தாக்குத் திட்டத்தின் முதலாவது கட்டத்தை மேற் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வரு கின்றன. இத்திட்டம் பூர்த்தியானதும் மக்களுக்கு வீட்டு உபயோகத்துக்கும் கைத் தொழில்களுக்கும் மேலதிகமாகத் தேவைப்படும் மின் சக்தியை வழங் கக்கூடியதாக இருக்கும்.

பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதனுல் காலா வதியான மின்சார மசோதா, திருத்தப்பட்ட முறை யில் மீண்டும் சமர்ப்பிக்கப்படும். இதில், உத்தேசிக் கப்பட்டுள்ள சபைக்கு மாற்றலாகும் மின்சாரப் பகுதி யைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களின் உரிமை கள் சேவை நிபந்தனைகள் ஆகியவைபற்றி திருப்தி கரமான உத்தரவாதங்கள் இடம் பெறும்.

### மதுவரிக்கொள்கை சீர்திருத்தம்

உடல் நலனுக்குக் கேடான மதுபான வகைகள் கள்ளத்தனமாக வடிக்கப்படுவதால் ஏற்படும் அபா யத்தை எதிர்த்தற்கான நடவடிக்கைகள் உட்பட மதுவரிக் கொள்கையினையும் நடைமுறையையும் விரைவில் விரிவாகச் சீர்திருத்த எனது அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

நெசவுத் தொழிலை விஸ்தரிக்க மேலதிகமான இயந் திரங்களைப் பெறுவதற்கான பேச்சு வார்த்தைகள் பூர்த்தியாகியுள்ளன.

ஐக்கிய நாடுகளின் விசேஷ நிதி உதவியுடன் சிறு கைத்தொழில்களில் வேலை செய்பவர்களுக்குத் தொழில் நுட்பப் பயிற்சி அளிக்க சிறு கைத்தொ ழில் சேவைகள் நிலையம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

கண்டி குடியானவர்கள் கொமிஷனின் அறிக்கை அமுல் நடத்தப்படுவதை இடையருது பரிசீலனை

செய்துவர ஓர் ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பசையிடும் நான்காவது இயந்திரம் ஒன்றையும், நாற்பத்தெட்டு மின்தறிகளையும், மின்தறி தொழிற்சாலை ஒன்றையும் வாங்குதற்கான பேச்சுவார்த்தைகள் பூர்த்தியாகியுள்ளன. இவற்றை நிறுவும் வேலை 1962/63 ல் பூர்த்தியாகிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வெலோனுவில் ஒரு புடவை செப்பனிடும் தொழிற்சாலைக்கான மேலதிக இயந்திரங்கள் விரைவில் நிறுவப்பட விருக்கின்றன.

**கைத்தொழில் தோட்டம்**

கண்டி மாவட்டத்தில் நத்தரம்பொத்த என்னுமிடத்தில் ஒரு கிராமக் கைத்தொழில் தோட்டம் தாபிக்கப்படும். இலங்கைக்குத் தேவையான பீங்கான் பொருட்களில் மூன்றிலொரு பகுதியை பீங்கான் கூட்டுத்தாபனம் தயாரித்து அளிக்கின்றது. வெள்ளைக் களிமண் தொழிற்சாலையொன்று பொரலஸ்கமுவாவில் விரைவில் உற்பத்தியை ஆரம்பிக்கும். அடுத்த வருடத்தில் இரண்டாவது பீங்கான் தொழிற்சாலை ஒன்றை பொரலஸ்கமுவாவில் நிறுவுதற்கான அமைப்புத் திட்டங்கள் தயாராகிவிட்டன. வெளிநாட்டு உதவியைக் கொண்டு இரும்புப் பொருட்களையும் சிறு கருவிகளையும் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை யொன்றை நிறுவுதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மா ஆலை ஒன்று, சிலிக்கேற் செங்கல் தொழிற்சாலை ஒன்று, கப்பல் கட்டும் துறை ஒன்று, வச்சிரத் தொழிற்சாலை ஒன்று ஆகியவற்றை நிறுவுதல் சம்பந்தமான திட்ட அறிக்கைகள் அபிவிருத்திப் பிரிவால் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. பெற்றோல் உபபொருட்களை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழிற்சாலை ஒன்றை நிறுவ முடியுமா என்பது பற்றி விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. நவச்சார கந்தகியை உற்பத்தி செய்தற்கான உரத் தொழிற்சாலை யொன்றை நிறுவுதற்கு உலக முழுவதிலுமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படும். பெற்றோல் சுத்திகரிப்பு தொழிற்சாலை ஒன்றை நிறுவும் வேலை முன்னேற்றமடைந்து வருகிறது.

ஐந்து ஓட்டுத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு வருகின்றன. மேலும் ஐந்து தொழிற்சாலைகளை நிறுவும் வேலை புதிய நிதி வருடத்தில் ஆரம்பிக்கப்படும்.

வாழைச்சேனையில் காகித உற்பத்தி இரு மடங்காக அதிகரித்துள்ளது. காகித மட்டையும் புதினப் பத்திரிகைக்கான தாள்களும் உற்பத்தி செய்தற்கான யோசனைகள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

**பத்திரிகை மசோதா**

வரிவிதிப்புச் சட்டங்களைத் திருத்தித் திரட்டுதற்கான மசோதா ஒன்றும், அரசாங்க கடன் உதவும் தாபனங்கள் எல்லாவற்றையும் ஒன்று திரட்டும் மசோதா ஒன்றும், பத்திரிகை ஏகபோக உரிமைகளை தடை செய்யும் மசோதா ஒன்றும் உங்களின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்படும்.

**தேசிய விளையாட்டுச்சபை**

பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதால், காலாவதியான தேசிய விளையாட்டுச்சபை யொன்றைத் தாபிப்பதற்கான மசோதா, அரசாங்கக் கூட்டுத் தாபனங்கள் சம்பந்தமான மசோதா ஆகியவற்றைப் பரிசீலனை செய்யும்படி நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுவீர்கள்.

மக்கள் தங்களுக்கும் தங்கள் பிற்சந்ததியினருக்கும், தாங்கள் பெருமைப்படக்கூடிய ஒரு தேசத்தை அமைத்துக்கொள்ள வேண்டுமென்ற அவர்களின் ஆசைகளையும் முயற்சிகளையும் கிரியா முறையில் அநுட்டானத்துக்குக் கொண்டுவருவதற்கே இப்பல்வேறு நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன. தேசிய சுபீட்சம் எனும் வாயிலைத் திறப்பதற்கு உள்ள திறவுகோல்கள் மூன்றேதான். கடும் உழைப்பு, நேர்மை, தியாகம் என்பவவையே அவை.

இன்றும், இனிமேலும் ஜனநாயக சோஷலிசத்தின் கனிகளைப் பறித்துப் புசித்து இன்புற, தேசிய பொருளாதார அபிவிருத்தித் துறையில் எனது அரசாங்கத்துடன் இதயபூர்வமாக ஒத்துழைக்குமாறு எனது பிரசைகளை நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

கடந்த பாராளுமன்றக் கூட்டக் காலத்தில் பொது நலவமைப்பு நாடுகளிலிருந்தும் அந்நிய நாடுகளிலிருந்தும் எனது அரசாங்கம் பெற்றுக்கொண்ட தொழில், நுட்ப, நிதி உதவிகளுக்காக, தனது மனப்பூர்வமான நன்றியைச் செலுத்துகின்றது.

இவ்விஷயங்கள் யாவற்றையும் உங்கள் ஆலோசனைக்குச் சமர்ப்பிக்கின்றேன். அவற்றை நீங்கள் மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

# அரசினர் புதிய கைத்தொழில் திட்டங்கள்

## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

கைத்தொழிற் பகுதியின் ஆரம்பத்தொழிலாக, 1950 ம் ஆண்டில் சீமெந்துத் தொழிற்சாலை காங்கேசன்துறையில் ஆரம்பிக்கப்பட்டது. இத்தொழிற்சாலைத் திட்டத்திற்கு ஒரு கோடியே தொண்ணூறு லட்சம் ரூபா செலவாகுமென முதலில் கணிக்கப்பட்டிருந்தபோதிலும் மேலதிகமாக ஏற்பட்ட செலவுகள் காரணமாக இத்தொகை ஈற்றில் இரண்டு கோடியே எழுபத்து மூன்று லட்சமாக அதிகரித்தது.

கைத்தொழில் பகுதியினரின் பரிபாலனத்தின் கீழிருந்த சீமெந்துத் தொழிற்சாலை 1956 ம்ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் தேதி காங்கேசன் சீமெந்து வேலைக் கூட்டுத்தாபனமென்ற பெயருடன் ஒரு கூட்டுத்தாபனமாக்கப்பட்டது. இக்கூட்டுத்தாபனம் 1959 ம் ஆண்டு ஜனவரி 1 ம் திகதி இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் என்று மாற்றப்பட்டது. இதுகாறும் காங்கேசன்துறையிலுள்ள தொழிற்சாலையோடு மாத்திரம் கட்டுப்படுத்தப்பட்டிருந்த சீமெந்துத் தொழில், இதன்பிறகு தீவு பூராவும் தன் தொழிலை விஸ்தரிக்கத் தொடங்கிற்று.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை வருடத்திற்கு 100,000 தொன் சீமெந்து உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தாலும், அது தொடக்கத்தில் இத்தொகையில் அரைவாசியைத் தான் உற்பத்தியாக்கிற்று. தொழிற்சாலை அமைப்பு முதலியவற்றில் ஏற்பட்ட குறைபாடுகளே இதற்குக் காரணமாயிருந்தன. 1954 ம் ஆண்டுக்குப் பின்னர் இத்தொழிற்சாலை முற்றாக இலங்கையர்களாலேயே நடத்தப்பட்டுவருகிறது. அங்கு வேலைசெய்பவர்களின் திறமையால் தான், உற்பத்தி, மேலதிக செலவுகள் இல்லாமல் பெருகத்தொடங்கிற்று. இப்போது ஆண்டுதோறும் சராசரி 80,000 தொன் சீமெந்து உற்பத்தியாகிறது. 1959 ம் ஆண்டில் உற்பத்தி 93,463 தொன்களாக அதிகரித்திருந்தது. சீமெந்து உற்பத்தியுடன் கொங்கிறீற் தந்திக்கம்பித்தூண்கள், பொருத்தக்கூடிய மலசலகூடங்கள், அழகுப் பொருட்கள் முதலியனவும் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

சீமெந்துத் தொழிற்சாலையில் 1961 ம் ஆண்டுக்கணக்குப்படி எல்லாமாக 987 பேர் வேலை செய்கிறார்கள். இவர்களில் 753 பேர் கூலி வேலை செய்பவர்கள்.

### மூலப்பொருட்கள்

சீமெந்து உற்பத்திக்கு முருகைக் கல்லும் களிமண்ணும் மூலப் பொருட்களாகத் தேவைப்படுகின்றன. திறம் முருகைக் கல்லுகள் தொழிற்சாலையின் சுற்றுடலிலேயே கிடைக்கின்றன. களிமண் தேவை இரு வகையில் பூர்த்தியாக்கப்படுகிறது. முருகைக் கற்களுக்கு மேற்படையில் இருக்கும் சிவப்பு மண்ணிலிருந்து சிறிதளவு களிமண் பெறப்படுகிறது. பெருந் தொகையான களிமண் தொழிற்சாலையிலிருந்து 146 மைல்களுக்கு அப்பாலுள்ள முருங்கனிலிருந்து கிடைக்கிறது. இதற்கென, கூட்டுத்தாபனம் அங்கு யந்திர சாதனங்களைக் கொண்ட களிமண் பிரதேசம் ஒன்றை வைத்திருக்கிறது.

### உற்பத்தியும் விநியோகச் செலவுகளும்

ஒரு தொன் சீமெந்து உற்பத்தியாக்குவதற்கு ரூபா 119.49 முடிகிறது. புகையிரதச் செலவும் உற்பத்திக்குத் தேவையான எரிபொருட்கள் போன்றவற்றுக்கான இறக்குமதி வரியும் தான் உற்பத்திச் செலவை அதிகரிக்கச் செய்கின்றன. ஒரு தொன் சீமெந்தை வேலைத்தலத்திலிருந்து கொழும்புக்கு புகையிரத மார்க்கமாகக் கொண்டு செல்லுவதற்கு மாத்திரம் ரூபா 47.14 முடிகிறது. எரிபொருட்களை உள்ளூருக்குள் அதாவது கொலனுவையிலிருந்து காங்கேசன்துறைக்கு புகையிரத மார்க்கமாய் அனுப்புவதற்கும் ஒரு தொன்னுக்கு ரூபா 57.21 முடிகிறது. இவைகளினால்தான் சீமெந்தின் உற்பத்திச் செலவு அதிகமாகவிருக்கிறது. இலங்கையில் அரசாங்கம் சீமெந்துத் தொழிற்சாலையை ஏற்படுத்தியதினால் வருடா வருடம் 5,656,000 ரூபா வெளிநாட்டுச் செலாவணியில் மீதம் ஏற்படுகிறது.

1959 ம் ஆண்டு தொடக்கம் சீமெந்துக் கூட்டுத் தாபனம் திட்டச்சபையுடன் ஒத்து இயங்கிவருகிறது. பத்தாண்டுத் திட்டத்தில் சீமெந்து அபிவிருத்தித் திட்டத்துக்கு அதிமுக்கியத்துவமும் முதலிடமும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆண்டுக்கு 200,000 தொன்களை உற்பத்தியாக்கக்கூடியதாக அதை விஸ்தரிப்பதென்றும், சீமெந்தைக் காங்கேசன்துறையிலிருந்து காலிக்கு கடல் மார்க்கமாக அனுப்பி ஏற்றுமதி, விநியோகம் ஆகிய துறைகளிலுள்ள செலவுகளைக் குறைப்பதென்றும் கூட்டுத்தாபனத்தார் வகுத்த திட்டத்தை, இதற்கென நியமிக்கப்பட்ட பிறநாட்டு நிபுணர்களும் கூட சரியென்று ஏற்றுக்கொண்டதோடு அபிவிருத்திக்கான வேறு திட்டங்களையும் சிபார்சு செய்திருக்கிறார்கள். காங்கேசன்துறையில் மூலப்பொருட்களை சுலபமாகப் பெறக்கூடிய வசதியும் அங்கு சீமெந்துத் தொழிற்சாலையை நடத்திவந்ததினால் ஏற்பட்ட தொழில் நுட்ப அனுபவங்களும் சேர்ந்து சீமெந்துத் தொழிலை பெருமளவுக்கு விஸ்தரிக்க வசதியளித்துள்ளன. புத்தளப்பகுதியில் போதியளவு மூலப் பொருட்கள் இருப்பதாகத் தெரிவதால் இன்னொரு சீமெந்துத் தொழிற்சாலை இங்கு நிறுவப்பட இருக்கிறது. ஆனால் இங்குகூட ஏற்றுமதி இறக்குமதிக் கஷ்டங்களும் எரிபொருட் கஷ்டங்களும் இருக்கத்தான் செய்கிறது. பத்தாண்டுத் திட்டங்களின்படி சனத்தொகையின் அதிகரிப்போடு அபிவிருத்தித் திட்டங்களுக்காக சீமெந்தின் தேவையில் அதிகரிப்பு ஏற்படும். இதனை சமாளிப்பதற்காக புத்தளத்தில் நிர்மாணிக்கப்படவிருக்கும் தொழிற்சாலையைவிட இன்னொரு தொழிற்சாலையையும் நிர்மாணிப்பதென்றும் காங்கேசன்துறைத் தொழிற்சாலையின் உற்பத்தியை 300,000 தொன்களாக அதிகரிக்கச் செய்வதெனவும் திட்டச்சபை சிபார்சு செய்தது. கூட்டுத் தாபனம் இதை ஆராய்ந்து மூன்றுவது தொழிற்சாலையை நிர்மாணிப்பதிலும் பார்க்க காங்கேசன்துறைத் தொழிற்சாலையின் உற்பத்தியை அதிகரிப்பதும் புத்தளத்தொழிற்சாலையை, கூடுதலான சீமெந்தை உற்பத்தியாக்கக்கூடியதாய் நிர்மாணிப்பதும் நல்லது எனக் கருதுகிறது. இவ்விதம் செய்வது காங்கேசன்துறையிலும் காலியிலும் துறைமுகங்கள் விஸ்தரிக்கப்பட்டு வசதிகள் ஏற்படுத்தப்படுவதாலும் புத்தளத்துக்கு புகையிரத சேவை விஸ்தரிக்கப்படுவதாலும் சுலபமாய்க் கைகூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கூறிய வகைகளில் இப்போது திட்டங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின்படி 1968 ம் ஆண்டில் காங்கேசன்துறை, புத்தளம் ஆகிய இரு தொழிற்சாலைகளும் 950,000 தொன் சீமெந்தை உற்பத்தியாக்கும்.

கூட்டுத்தாபனம் தற்போது சீமெந்து உற்பத்தியை அதிகரிப்பதிற்றான் அதிக கவனம் செலுத்துகிறதேயானாலும் குறைந்த செலவிற் பொருத்தும் வீடுகள் போன்ற இணைப்புகளைத் தயாரிப்பதிலும் கவனம் செலுத்துகிறது. பத்தாண்டுத் திட்டத்தின் முதற் பிரிவில் (1960—1963) சீமெந்து உற்பத்தி வருடத்துக்கு 80,000 தொன்களிலிருந்து 250,000 தொன்களாக அதிகரிக்கப்படும். காலியில் சீமெந்தை அரைத்து பக்கற்றுகளில் அடைக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்படும். காங்கேசன்துறையிலிருந்து மிகுதியாக உற்பத்தியாக்கப்படும் சீமெந்து, கட்டிகள் ரூபத்தில் காலிக்குக் கடல் மார்க்கமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அரைக்கப்பட்டு பக்கற்றுகளில் அடைக்கப்படும். போதிய சீமெந்து இலங்கையில் உற்பத்தியாகுமட்டும் காலியிலுள்ள தொழிற்சாலையில் இறக்குமதி செய்யப்படும் சீமெந்துக் கட்டிகள் அரைக்கப்படும்.

சுலபமாய்ப் பொருத்தக்கூடிய இணைப்புகளைத் தயாரிப்பதற்கு தீவு பூராவும் இணைப்புத்தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படும். அங்கு குறைந்த செலவில் பொருத்து வீடுகளின் இணைப்புகளும் குழாய்கள், தூண்கள் முதலியனவும் தயாரிக்கப்படும்.

# நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

குல. சபாநாதன்

தமிழ்க் கவியுலகில் தனிப்பெரும் புலவராய் விளங்கிய நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களை அறியாத தமிழனைக் காண்பதரிது. இத்தகைய பெரும் புகழினை அவர் ஆக்கிய நூல்களே ஈட்டித் தந்தன வெனினும், ஞானகுரு தரிசனமே அவருடைய வாழ்க்கையினை ஊடுருவி இணைத்துநிற்கும் பொற் கம்பியாகத் திகழ்கின்றது. மாதா, பிதா, குரு, தெய்வம் மலரடி தினம் தினம் வணங்குதல் வேண்டும் எனும் பொன் மொழியினைக் கடைப் பிடித் தொழுகி வந்தார்கள். ஆகவே புலவர் அவர்கள் இயற்றிய பாடல்கள் நல்லொழுக்க மெனும் நறுமணம் வீசும் பொன் மலர்களாக தமிழ்ப் பூங்காவில் அழியா இடம் பெற்றுவிட்டன.

புலவர் அவர்களின் வாழ்க்கை வரலாறு யாவரும் நன்கறிந்ததொன்று. நவாலியூர் அருமையினர் கதிர் காமருக்கும் இலக்குமிப்பிள்ளைக்கும் அட்டகிரி முருகப் பெருமான் அருளால் 1878 ம் ஆண்டில் சோமசுந்தரப் புலவர் பிறந்தார். ஐந்தாம் வயதில் மானிப்பாய் அருணசலப் புலவர் சோமசுந்தரனுருக்கு வித்தியாரம்பம் செய்து வைத்தார். பின்னர் அருணசல உபாத்தியாயருடைய மானிப்பாய் பாடசாலையிலும், தம்பையா உபாத்தியாயர் நடாத்திய நவாலிப்பாடசாலையிலும் கல்வி கற்ருர். மானிப்பாய் மாரிமுத்து உபாத்தியார் நடத்தி வந்த ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலங் கற்ருர்.

" தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல் "

என்னும் வள்ளுவர் வாக்கிற்கு எடுத்துக்காட்டாக விளங்கினர் தந்தையார் **கதிர்காமர்.**

**இழையது பழைய திருமையுந் தருவ**
**தமிழ்தினு மினிய தரியது பெரியது**
**வழியழி யழியா முதுசொமாய் வருவதென்**
**றிரவினும் பகலினு மெடுத்துரை திருந்தமிழ்**
**ஒல்லும் வகையா லோதுவித் தருளிய**
**நன்றியை நம்முயிர்க் கினியாய்**
**என்றும் மறவா தேத்துகம் யாமே**

" **எனத்தந்தையார் பதிற்றுப் பத்தில்** நன்றி நவில்கின்ருர் " இவன் தந்தை என் நோற்ருன் கொல் எனும் சொல் எனும் பொய்யா மொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய மகன் சோமசுந்தரனுர்.

புலவரின் உடன் பிறப்பாளரான **திரு. க. வேலுப்பிள்ளை** அவர்களும் இதனையே வலியுறுத்திக்காட்டு கின்ருர் இந்நூலின் முகவுரையில் :

**" கண்ணிமை யிமையும் மூடா**
**தாருயிர் கதியிற் சேரத்**
**தண்ணளி சுரந்து காக்கும்**
**தனிமுதற் கடவுளே போல்**
**மண்ணிடைச் சுமந்து பெற்று**
**வளர்த்துநல் லறிவு தந்த**
**அன்னைக்கு மப்பனுக்கு**
**மாற்றுகை மாறு முண்டோ "**

**இல்லையெனினும், " உப்பிட்டவரை உள்ளளவும் நினை " என்றமையால், அவர்தமை உயிருள்ளளவும் உள்ளத்தே கொண்டு போற்ற வேண்டியது ஒருதலை. எம்மை விட்டகன்ற அரும்பெறற்றந்தையார் எம்மைப் பெற்றுவளர்த்த அருமையையும், கற்பித்து நல்லொழுக்கத்தில் பயிற்றிய பெருமையையும், அவர் கூறிய நன்மொழிகளையும் மறவாது போற்றி வருதலும், அருமைத் தந்தையாராக வந்த அந் நல்லுயிரின் ஆக்கங் கருதி நாடோறும் கடவுளை வழிபட்டு வருதலும் எமது தீராக் கடனுகின்றன.**

எங்கள் தந்தையார் செய்த நன்றியை மறவாது பாராட்டுமுகத்தால் அவர் எம்மைப் பெற்று வளர்த்துக் கற்பித்தவற்றையும் அவருக்கு நல்லருள் கொடுக்க வேண்டு மென்று நாம் கடவுளைப் பராவியதையும் பத்துவகையாக அடைவு படுத்தி ஒவ்வொன்றுக்கும் பத்துப் பத்து அகவற் பாக்களாக, நூறு அகவற்பாக்களால், " **தந்தையார் பதிற்றுப் பத்து** " என்ற இந்நூலை எனது அரும்பெறற்றுணைவரும் ஆசிரியரும் ஆகிய **திரு. க. சோமசுந்தரம்**

பிள்ளை அவர்கள் ஆக்கித் தந்தார்கள். அதனை அச்சிட எண்ணியும் பொருள் முட்டுப்பாட்டால் பலநாட் கழியலாயின. இறைவன் திருவருளால் இப்போது அது நிறைவேறுவதாயிற்று.

இங்ஙனம்,
க. வேலுப்பிள்ளை.

பேராதனை,
10.10.33.

புலவர் அவர்களின் இளமைப் பருவ வரலாற்றினையும் தந்தையார் பிள்ளையைப் பேணும் முறையினையும், மகன் தந்தைக்காற்ற வேண்டிய கடனையும் இக்கால இளம்பிள்ளைகள் கட்டாயம் அறிந்திருத்தல் வேண்டும் எனும் அவாவினால் "**தந்தையார் பதிற்றுப் பத்து**" எனும் நூலிலிருந்து இரண்டொரு பகுதியை ஈண்டெடுத்துக் காட்டுதும்.

## தந்தையார் பதிற்றுப்பத்து

### இரங்கற்பத்து

உடல்நலி வுற்றுக் கிடையுறு காலைக்
கடவுளைப் பராவி யவுடத முரைத்துச்
சுட்டு விரலிற் றெட்டுநிலந் தெளித்து
உண்ணென ஊட்டுவை மன்னோ ! உண்டபின்
வாய்ச்சுவை மாறிடக் காயீ குவையே
கொண்ட மருந்து குமட்டி எதிரெடுப்பின்
கூந்தலே மோவெனக் கூறுவை மன்னோ
பத்திய முண்ணும் பக்குவம் வந்துழிப்
பொத்திய செல்வப் பொக்கண மவிழ்த்தே
ஐயிரு காசு கையினிற் றூக்கி
மருமகள் கரத்து வைத்துப் பரிவுடன்
நல்ல முருங்கைப் பிஞ்சு வாங்கி
மல்லி மிளகு சீரக மரைத்து
ஒல்லையிற் கறிசெய் துதவுக வென்றே
அம்முறை பலவு மறைகுவை மன்னோ !
உண்ணுங் காலை யுடனிருந் தமுதப்
பண்ணியல் பலமொழி பகருவை மன்னோ
இன்றுநான் நோயுற் றிருக்கு மிவ்விடை
உன்றிருக் கோலங் காண்கில னெந்தாய்
வருந்தி யுரைக்கும் வாய்மொழி கேளேன்
மருந்திழை மணிவிரல் யாண்டுற் றதுகொல் ?
இறந்தனை மோவுமெம் பெருமான்
அறந்தழை நன்மொழி யறைகுந ரியாரே. (2)

ஆசையோ டெந்தாய் தோசையுண் பதற்குக்
காலையில் வந்து கட்டில்வீற் றிருப்பாய்
பூசை முடித்துப் போதுவன் யானே
தம்பிவந் தாரெனச் சாற்றுவை மன்னோ
உண்பதன் முன்னுனக் குணவீ குவனே
அன்புடன் பழங்கதை யறைந்துண் பாயே
தொழில்முறைக் கல்விக் கழக மேகுழி
வண்டியைப் பூட்டித் தம்பி மென்மெலக்
கொண்டுபோய் வாவெனக் கூறுவை மன்னோ
நேரமுஞ் செல்லும் வரையுநில் லாதே
ஈரமுங் குழிரு மென்றுரைப் பாயே
வாயில் கடந்து வண்டிபோ மளவும்
நேயமொ டங்கே நின்றுபார்ப் பாயே
இன்றுனைக் காண்கில னெந்தாய்
நன்றுரைத் தெமையினி நயப்பவ ரியாரே. (4)

கட்புல னாகிய கடவுள ரிருவரில்
ஒப்பிலா வொருவ னாகி விட்புலம்
சென்றுரு நீத்த பொன்ரு மணியே
கட்புல னாகா விடினுமென் னுளத்தின்
உட்புல னுன் னுருவுகாண் கின்றேன்
குறுகுறு நடையுங் குறுங்கோ லொலிப்பும்
மறுவறு மன்பால் வாய்மலர் மலர்ந்து
தம்பியென் றழைக்குந் தமிழ்மொழி யோசையும்
எம்பெரு மானே இருசெவிக் கிசைக்கும்
இனியெவர் தம்பியென் றிசைப்பார்
பனிபடு முந்நீர்ப் பார்மிசை யானே. (7)

இமிழ்திரை முந்நீர் வளைஇய வுலகுக்
கமிழ்தினு மினிக்குந் தமிழ்மொழி யருமையை
இருசெவி நிறைய மொழிபவ ரினியார் !
மேலுறு கற்பக வியன்மரம் என்னுந்
தால விலாசம் சாற்றுவ தினியார் !
கந்தனைத் துதித்த கவியலங் காரஞ்
செந்தமிழ்த் திருப்புகழ் செப்புவ தினியார் !
கூற்றுப் புடைபெய ரருணையிற் கொற்றவன்
ஆற்றுப் படைதனை அறைபவ ரினியார் !
தேங்குபிங் கலந்தை சேந்தன் திவாகரம்
காங்கெய னுரிச்சொல் கழறுவ தினியார் !
வாய்சுரந் தவ்வை வளங்கிய மந்திரம்

ஈசுர மாலை யியம்புவ தினியார்
கந்தப் புராணக் கவிபல கூறி
நந்தா வறிவு நல்குவ தினியார் !
தேரையர் சொன்ன சிலசில வெண்பா
கூரரும் பொருளுடன் கூறுவ தினியார் !
நாடக வழக்கில் நடந்திடு பலபா
ஊடக முருக வுரைப்பவ ரினியார் !
பண்டைய புலவர் தனியனுய்ப் பகர்ந்த
தண்டமிழ்ப் பாக்கள் சாற்றுவ தினியார்!
சைவமுந் தெய்வத் தமிழுநன் கோங்கச்
செய்தவப் பயனுய்த் திருவுருக் கொண்ட
பூமலி மெய்ப்புகழ்ப் புண்ணிய மூர்த்தி
நாவலர் பெருமான் நல்லுரை யெடுத்தே
ஆவலொ டெங்கட் கறைபவ ரினியார் !
அரும்பெறற் றந்தையோ டறிவுபோ மென்ற
பெரும்பொரு ளுணர்ந்தனம் பெரியோய்
விரும்பிவிண் ணுலகம் மேவிய ஞான்றே. (9)

வருந்தலை வாழி வருந்தலை வாழி
பொருந்திய நெஞ்சம் புண்பட விருந்து
வருந்தலை வாழி வருந்தலை வாழி
கெட்டவர் தழைவர் கேடுகள் நீங்கும்
வெட்டிய கட்டையில் வேர்தழை யாதோ
ஆக்கமோ டிருந்தோ மந்நாள் இந்நாள்
நீக்கமில் மிடியால் நெடுந்துய ருறினும்
தயிரியம் விடாதே தம்பி யுயர்வுறுங்
காலமுங் கடைமுடை வருமெனச் சாலவும்
மிடியினல் வருந்தும் வேளையில் எந்தாய்
அறிவுரை கூறித் துயராற் றுவையே
ஆற்றி விடுபவ ரினியார்
சேற்றினிற் புதைத்த தூணெைத் தனமே. (10)

தந்தையார் பதிற்றுப் பத்து என்னும் நுலுக்கு பண்டிதமணி. க. வெண்ணெய்க் கண்ணனுர் அவர்கள் அளித்த சிறப்புப்பாயிரம்.

**சைவம் பழுத்த சலியாக் கற்பகம்**
**இன்பம் பழுத்த இயற்றமிழ்ப் பாவலன்,**
**அன்பிற் பெரியோன் அருள்வழிக் குரியோன்**
**தவாஅ வளஞ்சா னவாலி யூரன்,**
**உவாஅத் திங்களி னெளிர்பூ முகத்தோன்**
**சிறைசே ரழகுப் பெயரோன்**
**மறைசேர் தமிழெலா மருவுநா வலனே.**

புலவர் அவர்கள் தாம் பாடிய "சுகாதாரக் கும்மி", யிலும் அப்பனையும் அம்மையையும் முதலில் அஞ்சலிசெய்தபின் ஞானகுருவினை அஞ்சலி செய்கின்ருர்.

**சுகாதாரக்கும்மி**

**காப்பு**

**செப்புஞ் சுகாதார நன்முறை வாழ்க்கையைச்**
**செந்தமிழாற் கும்மி பாடிடவே**
**அப்பனை யம்மையை ஞான குருவினை**
**அஞ்சலி செய்குவம் ஞானப்பெண்ணே.**

நல்லொழுக்கம் எனும் நன்னீரும் சைவசமய ஒழுக்கம் எனும் உரமும் முளையிலிருந்தே கிடைத்தமையால், சோமசுந்தரம் எனும் செஞ்சாலி செழித்து வளர்ந்ததெனச் சொல்லவும் வேண்டுங்கொல். தந்தையாரிடமிருந்த முருக பக்தி தனயனிடம் கொளுந்துவிட்டெரியத் தொடங்கியது. தனயன் முற்பிறப்பிற் செய்த தவம் நற்பயனளித்தற்கேற்ற சூழ்நிலையும் வாய்த்தது. இவற்றின் பயனுகச் சோமசுந்தரனுர் இளம் வயதிலேயே தமது குடும்பத் தெய்வமாகிய அட்டகிரிகந்த சுவாமிமீது ஒரு பதிகம் பாடினுர். இதற்கு முன்னர் பன்னிரண்டாம் வயது தொடக்கம் சிற் சில தனிக்க விகளைத்தம். நண்பர் கேள்விப்படி பாடியுள்ளார். தம்முடைய நண்பர் திரு. இராமலிங்கம் வைத்தியலிங்கம் கேட்டுக்கொண்டதற் கிணங்கப் புலவர் பாடிய செய்யுள் இது ;

**ஆறு முகமுடையாய் ஆறிரண்டு தோளுடையாய்**
**ஏறு மயிலுடையா யென்னுடையாய்—கூறு செயும்**
**வேலுடையாய் என்றன் வினையுடைய வேமிதிக்குங்**
**காலுடையாய் நீயே கதி.**

(வளரும்)

# புலவர் புஷ்பாஞ்சலி

தாரமா யென்போல்வாய் தாயானுள் கைக்குநல்ல
ஈரமாய்த் தித்திக்கு மின்கவியோய்—வீரமாய்
நின்கவியே வீறுகொளும் நீணிலத்தே
நின்புகழ்சொல்
என்கவிக்கு முண்டே யிடம்.

அந்திய கால மருகக லாதுசிவ
மந்திரமே செப்பிநின்ற மாதரசை—முந்தொருநாள்
கைக்குக் கவிசொல்லிக் கண்ணிணைக்கும்
பாடினை வாய்க்
குய்க்குங் கவியெங்கே யோது.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

திங்களூர் வேணிச் சிவபெருமான் கண்ணுதித்துப்
பெங்களூர் வந்த பெருமணியின் பாதமலர்
எங்களுக்குள் ளேகாட்ட விருந்தவங்கள் முன்செய்த
புங்கவனே யெம்மைப் புறக்கணித்துச் சென்றனை
யோ.

நீலகண்டனுக நீநடித்த நாடகத்துள்
கோலத்தைக் கண்டு குதித்தெழுந்த காதலினுன்
காலில் விழுந்தேனைக் காத்திடுவ னஞ்சலென்றுய்
ஞாலத் தெனையிருத்தி நடந்தாய் சிவலோகம்.

பொன்னுலை வாழும் புரந்தரனுர் தேர்விழாவாம்
நன்னுளில் வந்த நல்லசுப்ர மாமணியே !
உன்னும மன்றி வேறுரையா வென்துணைவன்
தன்னுவிக் கீவாய் புகலிடமுன் றிருவடியே.

திரு. க. வேலுப்பிள்ளை.

கவிக்கு முகிலென்கோ காக்குமர ணென்கோ
புவிக்கு மணியென்கோ பொள்ளற்—செவிக்கு
விருந்தென்கோ நீற்றுல் வினைபோக்குந் தெய்வ
மருந்தென்கோ என்றுணையாம் மன்

பண்டிதர். க. சரவணமுத்து.

பண்ணுர் தமிழாம் பாற்கடலிற்
பழுத்த புலமை மத்திட்டுப்
பாங்கிற் கடைந்து கலைவாணர்
பாகே தேனே யெனப்பரவ
விண்ணோர் நாண வமுதனுங்க
வேண்டுந் துறைகள் மடைதேக்க
விலையே யறியாப் பாவமுதம்
விருந்திற் றந்த பெருந்திருவே !!
எண்ணுர் கல்விச் சுடர்விளக்கே !
இயற்கைத் தாயின் கவினெல்லாம்
எழுதா வண்ணம் பலவூற
எழுதும் வண்ணப் புலவோனே !
கண்ணுர் மணியி லெமையிருத்திக்
காதல்செய்து வளர்த்திட்ட
கண்ணே ! எந்தாய் ! நின்மலர்த்தாள்
கருத்தில் வைத்துக் கும்பிடுவோம்.

சோ. இளமுருகனுர்.

நட்டார்க்கொன் றுதவோம்நாம் நன்ருற்ருேம்
பத்தினிமார்
பெட்டாங்கு வாழ்ந்திடுவோம் பெரும்பழை
யெய்திடவே
தட்டாமே யுன்சொல்லைத் தாரந்தான் தாயாகி
இட்டமுடன் செயநீயும் இன்பத்தாற் பாட்டிசைத்தாய்

சோமசுந் தரப்புலவ ! தோற்றஞ்சால் புகழுடையாய்!
நீமறைந்த அவ்வேளை நின்கடன்கள் புரியாமல்
தாமிருந்த கட்டிற்றுன் தடாகமெனக் கண்சொரிந்த
தேமதுரத் திளமுருகன் செயலெம்மை யுருக்கிடுமே

வித்துவான் க. கார்த்திகேயனுர்

தாரமாவாய் தாயாவாய் தந்தைக் கருகிருந்து
கூரவாய் குருநாமம் கூறுவாய்—சேர
வருவாய்போ வாயடைக்கும் மந்திரவா யானுல்
ஒருவாய் திருவாய் உரை.

சோ. நடராசன்.

நவாலியூர் திரு. க. சோமசுந்தரப் புலவர் அவர்கள்மீது பாடிய

# வாழ்த்துப்பா

செந்தமிழ் வித்துவான் பிரம ஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் இயற்றியது

ஆசிரியப்பா

ஈழநன் மாதின் முகமெனத் திகழும்
யாழ்நக ரத்தின் குடபா லதன்மிசை
வேளாண் வாழ்க்கையிற் ருளாண்மை பெறீஇ
யைம்புலத் தாறினை நன்கினி தோம்பலு
மன்பு மறனு மின்பமும் பொருந்திச்
செந்தமிழ் சிவனு மந்தண் வாழ்க்கைச்
சானறோர் போற்றத் தோன்று நற்குடிச்
செல்வரு மெய்ந்நூல் கற்றநன் புலவரு
முறைந்தொளிர் செவ்வியிற் சிறந்திசை பரப்பிச்
சுரிமுகச் சங்கினம் வரிமடை யுடைப்ப
மட்டியில் பூந்துகள் கொட்டிச் சிறைசெயுங்
கவிழ்ந்துணர்த் தேமாம் பொழில்புடையுடுத்துத்
தவாஅ வளம்பொலி நவாலியம் பதியில்
விருந்துபுறந் தாரா வருந்தவர்ப் பேணித்
திருந்திய வில்லறம் போலிய நடாத்திய
கதிர்காம வேண்மா னீன்றநற் புதல்வ !
பல்கலை வாய்ந்த தொல்புகழ்ப் புலவர்
முன்னுள் போல விந்நா ளின்றெனுங்
குறைதவப் புலமை நிறைதர வீழத்
தினையறு புலவனு யிலங்குபே ரறிஞ !
எவரும் புகழ மேவரும் பொறையருள்
சாந்தம் வாய்மை தண்ணளி முதலாம்
பெருமைகள் படைத்த வொருதனிக் குன்ருய்ச்
சித்தாந்த வொழுக்கமு நிந்திய பூசையும்
பக்தியி னியற்று முத்தம சீல !
பல்லாண் டாக வெல்லையில் மாணவர்க்
கறிவுநனி கொளுத்தி விளங்கு மாசிரிய !
உயிர்க்குறு நோயை யுணர்மருத் துவன்போ
"னுயிரிளங் குமரன்" எனவொரு நாடகம்
அயர்வற வியற்றி யளித்தனை விருந்தே

அதா அன்று,

மைந்தரு மகளிருஞ் சிந்தையுட் கொண்டு
தந்தைதாய்ப் பேணச் செந்தமிழ் சிவணத்
தந்தையார் பசிற்றுப் பத்தெனு மொழுக்க
விழுப்பந் தரூஉம் மேன்மைகொ ளொருநூ
லமிழ்தென வோதி யிமிழிசை பெற்றனை

அஃதோ,

கந்த வனப்பதிச் செந்தமிழ் முருகனைத்
தேன்மொழி பயில நான்மணி மாலையாற்
புனைந்துநனி யருளும் வனைந்துநனி பெற்றனை

அஃதோ,

கந்த புராணக் கடலது கடையூஉ
வந்தநவ நீதக் கருப்பொரு ளுரைநூல்
தந்தனை யிந்த வையகந் தெளிந்திட

அஃதோ,

பாலகர் படிக்கப் பாக்கள்பல வியற்றிப்
பரிசின் முதலதாப் பற்றிநின் றனையே

ஐய !

நின்றன் குணங்கள் நின்றன் பெருமைகள்
நின்றன் கவிகள் நிலமிசை யென்றும்
வழிவழி நின்று வலம்பெறு மன்ருே ?

இத்தினம்,

நின்றன் புலமையி னிறைவுமிகப் பேணி
யன்புடை யறிஞ ரளித்திடும் பொற்கிழி
மற்றும் பரிசில் பெற்றிடும் புகழ்தான்
நின்னது வாமோ விந்நாட் டதன்ருே ?
இமிழ்கடல் வரைப்பிற் றமிழ்மொழி வளர்த்
தினும்
ஆயுள் நீ டுற்றே யணிநகு லாசலப்
பெருங்கடல் மணலினும் பெருகி யென்றும்
பெரிதுவாழ்ந் திடயாம் பேணிவாழ்த்துவமே

# புதியன புகுதல்

வித்துவான் கி. வா. ஜகந்நாதன்.

தொல்காப்பியர் திடீரென்று ஒருநாள் தமிழ் நாட்டுக்கு வருகிறார். எந்தத் தொல்காப்பியர் என்று கேட்கிறீர்கள்? தொல்காப்பியம் என்ற அருமையான இலக்கணநூலை இயற்றினாரே, அந்தத் தொல்காப்பியரே தமிழ்நாட்டுக்கு எழுந்தருளுகிறார். ஏதோ ஓர் ஊரில் மக்கள் பேசிக் கொண்டிருக்கும் இடத்தில் வந்து நின்று பார்க்கிறார்; காதால் அவர்கள் பேசும் பேச்சைக் கேட்கிறார். அவர்கள் பேசுவது தமிழ்தான். ஆனாலும் தொல்காப்பியருக்கு இந்தத் தமிழ் எளிதில் புரியாது. அவர் காலத்துக்குப் பிறகு எத்தனையோ சொற்களை நாம் உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம். வெளியிலிருந்தும் பல வார்த்தைகளைக் கொண்டு வந்து தமிழாக்கி இருக்கிறோம். சொற்களிலும் வாக்கியத்திலும் பல மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. அவற்றைத் தெரிந்து கொள்ளாத தொல்காப்பியருக்குச் சில சொற்களைக் கொண்டு தமிழ் என்று ஊகிக்க முடியுமேயன்றி, பேச்சு முழுவதையும் உடனுக்குடன் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாது.

## தொல்காப்பியருக்குப் புரியாத தமிழ்

"நீயும் நானும் அந்த இடத்திற்குப் போவோம்" என்று இருவர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதை அவர் கேட்கிறார். அவருக்கு நீயும் என்பது விளங்கும். நானும் என்பது விளங்காது; பேசியவர், யானும் என்று சொல்லி யிருந்தால் அறிந்து கொள்வார் அப்படியே, அந்த என்ற சொல் அவருக்குத் தெரியாது. அந்த இடம் என்பதை அவ்விடம் என்று சொல்லுபவர் அவர். போவோம் என்பது அவருக்கு மயக்கத்தை உண்டக்கும். அவர் எழுதின இலக்கணத்தின்படி "போவேம்" என்று தான் சொல்ல வேண்டும். ஆம், அம், எம், ஏம், என்ற விகுதிகளையுடைய சொற்களை தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள் என்று இலக்கணத்தில் சொல்வார்கள். வந்தனம், வந்தாம், வந்தெனம், வந்தேம் என்பவைபோல வருவன அவை. வந்தோம் என்ற சொல் தமிழில் வழக்கில் இல்லாத காலம், தொல்காப்பியர் காலம், அல்லது நூல் வழக்கில் இல்லாமல், எங்கோ பேச்சு வழக்கில் மிகவும் குறைவாக வழங்கியிருக்கலாம். எப்படியோ, வந்தோம் என்பதற்குத் தொல்காப்பியத்தில் இலக்கணம் இல்லை.

ஆனால் நாளடைவில் வந்தேம் என்பது மூலையில் ஒளிந்து கொண்டது. பழைய இலக்கியங்களில் நிற்கிறது. வந்தோம். போனோம், போகிறோம், போவோம், பேசமாட்டோம், என்று ஓம், ஓம் என்ற விகுதியையுடைய சொற்களே வழக்கில் வந்துவிட்டன. அதைப் பார்த்தார் நன்நூல் இயற்றிய பவணந்தி முனிவர்.

"அம், ஆம் என்பன முன்னிலையாரையும் எம் ஏம் ஓம் இவை படர்க்கையாரையும்" சேர்ந்து வரும் படர்க்கைச் சொற்கள் என்று இலக்கணம் செய்துவிட்டார். புதியன புகுதல் வழுவன்று என்று புதிய இலக்கணத்தை அமைத்தார். இது சொல்லின் இலக்கணத்தைச் சொல்லும் பகுதியில் வருவது.

புதிய புதிய சொற்களைத் தமிழில் நாம் உண்டாக்கிக் கொள்வதோடு வேற்றுமொழிச் சொற்களும் தமிழில் வந்து புகுகின்றன. இப்படிப் புகுவனவற்றைத் தனியே வகைப்படுத்தி அதற்கு ஒரு பெயரும் இலக்கண ஆசிரியர்கள் அமைத்திருக்கிறார்கள். பொதுவாகத் தமிழில் உள்ள சொற்களை இயற்சொல், திரிசொல், வடசொல், திசைச்சொல் என்று நான்கு வகையாகப் பிரிப்பார்கள். இயற்சொல் தமிழ்நாட்டில் இயற்கையாக வழங்கும் சொல். ஆண், பெண், நிலம், நீர் என்பவை போல உள்ளவை, இயற்சொற்கள். புலவர்கள் ஒரே பொருளையுடைய சொற்களை நூல்களில் வழங்குவார்கள். ஒரு சொல்லே பல பொருட்பட இலக்கியத்தில் வரும். இப்படி வருவன திரிசொற்கள்; இலக்கியங்களில் மட்டும் வழங்கும் சொற்கள் என்று ஒருவாறு சொல்லலாம். ஆடூஉ என்பது ஆண் என்ற பொருளுடைய சொல். ஆண் என்றால் எல்லோருக்கும் தெரியும், ஆடூஉ என்றால் புலவர்களுக்கு மட்டும் தெரியும். அது திரிசொல். பெண்ணை மகடூஉ என்று சொல்வதும் உலகத்தை ஞாலம் என்று சொல்வதும் நீரைப் புனலென்பதும் இலக்கியத்தில் காணலாம். அவை திரிசொற்கள்.

ஸம்ஸ்கிருதத்திலிருந்து திரிந்தும் திரியாமலும் தமிழில் வந்து வழங்குபவை வடசொற்கள். கம

லம் என்பது தாமரையைக் குறிக்கும். அது திரியாமலே வந்த வடசொல். அரன் என்பது ஹரன் என்பது திரிந்து வந்த வடசொல். தமிழில் பிறமொழிச் சொற்களைவிட வடமொழிச் சொற்கள் கலப்பது மிகுதியாக இருந்தமையின் அவற்றைத் தனியே ஒரு வகையாக்கிப் பெயர் அமைத்தார்கள். மற்ற மொழிகளிலிருந்து தமிழில் வழங்குவன வற்றைத் திசைச்சொல் என்றார்கள்.

தொல்காப்பியர் காலத்தில், இந்தக் காலம் போலப் போக்குவரத்து அதிகமாக இல்லை. அதனால் தமிழ்நாட்டுக்குப் புறம்பே உள்ளவர்கள் அடிக்கடி கலந்து உறவாடும் வாய்ப்புகள் குறைவு. ஆனால் தமிழ் நாட்டுப் பகுதிகளில் உள்ளவர்கள் கலந்து பழகினார்கள். எல்லோரும் தமிழே பேசினாலும் சிலபகுதிகளில் மக்கள் வழங்கும் சில சொற்களை வேறு பகுதிகளில் உள்ளவர்கள் தெரிந்து கொள்வதில்லை. இந்தக் காலத்தில் கூடச் செட்டி நாட்டில் காவணம் என்று யாவரும் வழங்கும் சொல்லைத் திருச்சிராப்பள்ளி, தஞ்சையைச் சேர்ந்த பகுதிகளில் சொல்வதில்லை. சொன்னால் விளங்காது, பந்தல் என்றால் தெரியும். திருநெல்வேலியில் காணம் என்றால் தெரிந்து கொள்வார்கள். தஞ்சையில் கொள் என்றால்தான் அது விளங்கும்.

தமிழ் நாட்டின் மையமாகிய மதுரையைச்சார்ந்த பகுதியைச் செந்தமிழ்நாடு என்கிறார்கள். அதைச் சுற்றியுள்ள பகுதிகளைப் பன்னிரண்டாகப் பகுத்தார்கள். பொங்கர் நாடு, ஒளிநாடு, தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குட நாடு, பன்றி நாடு, கற்கா நாடு, சீத நாடு, பூழி நாடு, மலை நாடு, அருவா நாடு, அருவா வடதலை நாடு என்று அவற்றை வழங்கினார்கள். அந்த அந்த நாடுகளில் மட்டும் வழங்கிய சில சொற்களைத் திசைச் சொற்கள் என்றார்கள். தொல்காப்பியர்,

“செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தம்குறிப் பினவே திசைச்சொற் கிளவி”

என்று இலக்கணம் வகுத்தார். அதற்கு உதாரணம் காட்டும்போது சேனாவரையர் என்ற உரையாசிரியர், “தென்பாண்டி நாட்டார் ஆ, எருமை என்பவற்றைப் பெற்றமென்றும், தம்மாமி என்பதனைத் தந்துவையென்றும் வழங்குப” என்று எழுதுகிறார்.

நாளடைவில் பாரத நாட்டில் இமாசலம் முதல் கன்னியாகுமரி வரையில் உள்ள பலநாட்டினரும் அதிகமாகக் கலந்து பழகலானார்கள். அதனால் அந்த நாடுகளில் வழங்கும் சொற்கள் தமிழிலே புகுந்தன. “வேடிக்கையாகப் பேசினான்” என்று சொல்கிறோம். அது வேடுக என்ற தெலுங்குச் சொல்லிலிருந்து வந்தது. குலாமர் என்று பட்டினத்தார் பாடுகிறார்; அது அடிமையைக் குறிக்கும் குலாம் என்ற உருதுச் சொல்லிலிருந்து வந்தது.

“சலாமிடற்கு எக்கறும் குமரனை” என்று குமரகுருபரர் பாடுகிறார். சலாம் என்பது இந்தி மொழியிலிருந்து புகுந்த சொல். இவற்றையும் திசைச்சொல்லென்றே சொல்லவேண்டும். பவணந்தி முனிவர் நன்னூலில் திசைச் சொல்லின் எல்லையை விரிவாக்கினார்:

“செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழொழி நிலத்
தினும்
தம் குறிப்பினவே திசைச்சொல் எனப”

என்றார். தொல்காப்பியர் செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தை மாத்திரம் சொன்னார். இவரோ பாரதநாட்டு மொழிகளாகச் சொல்லப் பெறும் பதினெட்டு மொழிகளில், தமிழ் ஒழிந்த மற்றப் பதினேழு மொழிகளிலிருந்தும் வந்து தமிழிற் புகுந்தவற்றையும் சேர்த்துக்கொண்டார். இது புதியன புகுதல்.

### உலகப் பழமொழிச் சொற்கள் வந்து கலப்பு

நம்முடைய காலத்திலோ உலகம் முழுவதும் வெவ்வேறு மொழிகளில் வழங்கும் சொற்கள் சில நம் பேச்சில் கலந்துவிட்டன. நாம் புத்தகம் வைக்கும் அலமாரி தமிழ்ச்சொல் அன்று; இந்தியாவின் பதினெட்டு மொழிகளில் வழங்கும் சொல்லும் அன்று. அது போர்ச்சுகல் மொழியிலிருந்து வந்தது. சன்னலும் போர்த்துக்கீசிய மொழிதான். கிருஸ்தவர்கள் கும்பிடும் சிலுவை நல்ல தமிழ்ச் சொல்போலவே ஒலிக்கிறது ஆனால் அது வேற்று மொழியிலிருந்து வந்ததே. நோயாளியைச் சீக்குக்காரன் என்கிறோம். சீக்கு ஆங்கிலச் சொல்லிலிருந்து வந்தது. கார், ரெயில், போன்ற சொற்களும் பிற மொழியிலிருந்து வந்தவையே இவற்றை நாம் தமிழாகவே ஆள்கிறோம். இவற்றையும் திசைச் சொற்களிலே சேர்த்துக் கொள்ளவேண்டும்.

செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்துச் சொற்களைத் தொல்காப்பியர் திசைச் சொல்லாக்க, பவணந்தி முனிவர் பாரத நாட்டில் வழங்கும் பதி

(19 ம் பக்கம் பார்க்க)

# விபுலானந்த அடிகள்

திரு. மா. பீதாம்பரன் அவர்கள்

**சீரேறச் சிலம்பேறச் செந்தமிழ்மும் மையும்ஏறப்**
**பேரேறப் பெருநாரை பெருங்குருகின் திறம்ஏறக்**
**காரேறு மூதூரிற் கண்ணம்மை திருவயிற்றில்**
**ஏரேறப் பிறந்தபிரான் இணைஅடிகள் ஏத்துகிற்பாம்**

என்று, ஈழநாடு ஈன்றருளிய **இயலிசை நாடகப் பேராசிரியர் விபுலானந்த அடிகளாரை** வணங்கி, அவர் இறைவனடி எய்திய **பதினைந்தாம்** ஆண்டு நிறைவுறும் இந்நாளில் (19.7.1962) அடிகளாரைக் குறித்து ஒரு சில கூறுவாம்.

அடிகளார் இயற்றிய அரிய நூல் " யாழ்-நூல் " என்னும் இசைத் தமிழ் நூலாகும். இந்த நூல், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில், திருக் கொள்ளம் பூதூர்த்திருக்கோயிலில், ஆளுடைய பிள்ளையார் திருமுன், இயலிசைநாடகப் புலவர் பலரின் சமுகத்தில், அரங்கேற்றப்பட்டது. இது நிகழ்ந்தது 1947 ஆம் ஆண்டு ஆறும் மாசம் ஆறும் திகதி. இது நிசழ்ந்து இரண்டு திங்கள் நிறைவுறு முன், ஆடித்திங்களில் ஆயிலியத்திரு நாளில் (19.7.47) ஈழநாட்டின் தலை நகரமாகிய கொழும்பு மாநகரத்தில் அடிகளார் இறைவன் திருவடி எய்தினர்.

அடிகளார், யாழ்-நூல் அரங்கேற்றத்திற்குச் செல்லுங்கால், யாழ்ப்பாணத்திலிருந்து புதுக்கோட்டைக்குப் புகைவண்டியிற் செல்லும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவ்வாண்டில், சித்திரை வருடப் பிறப்பன்று, திருச்சி வானொலியில் அடிகளாரின் பேச்சு. ஆதலால் பங்குனித் திங்கள் நிறைவுறுமுன் புதுக்கோட்டைக்குப் போக வேண்டியதாயிற்று.

புகைவண்டியில் இருந்த இருபத்து நான்கு மணி நேரமும் அடிகளார் இசையின் இயல்பினையும், இசை இயற் கணிதத்தைப்பற்றியுமே பேசிக் கொண்டிருந்தார்கள்.

தமிழ் நாட்டின் நடுவாகப் புகைச்சகடம் சென்றது. சடிதியாக, " தம்பி ! அம்மலையைப் பாருங்கள் " என்றார். அடிகளார். உடனே பார்த்தேன் ; " பொதியமோ " என்று எண்ணினேன். " அது தான் பூங்குன்றம் " என்றார்கள். அப்பொழுது அவர் முகத்திலே ஒருநாளும் இல்லாத பொலிவு தோன்றிற்று. யான் " யாதும் ஊரே ; யாவரும் கேளிர் ; தீதும் நன்றும் பிறர்தரவாரா " என்றேன்.

பூங்குன்றத்தைக் கண்டதும், " யாதும் ஊரே "; என்று பாடியருளிய " கணியன் பூங்குன்றனார் " என்னும் சங்கப் புலவரை நினைந்தார் ; " இது தான் கணியன் பூங்குன்றனார் வாழ்ந்த இடம் ; " என்று கூறினார். இசைப்பேச்சை மறந்தார். அப்பாடலைப் பாடினார்கள் ; அதில் மயங்கி விரிவுரை நிகழ்த்தினார்கள். புதுப் பொருள் ; புத்துரை ; புதுநயங்கள், அடிகளார் திருவாயினின்றும் பொழிந்தன.

**" நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன**
**சாதலும் புதுவ தன்றே ".**

**"கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று**
**நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர்**
**முறைவழிப் படூஉம் என்பது, திறவோர்**
**காட்சியிற் றெளிந்தனம் "**

என்று பாடினார்.

அவர் முகப்பொலிவின் பொருளினை அன்று உணர்ந்திலேன் ; ஆடித்திங்கள் ஆயிலிய நாளில் அறிந்தேன்.

அடிகளாரின் பிரிவை நினைக்குந்தோறும் அவர்கள் கூறிய இவ்வடிகள் என் செவிகளில் இசைக்கின்றன. வானொலிப் பேச்சு நிகழ்ந்த பொழுதும், அவர் அயலில் இருந்தேன். பேச்சு விஷயம் அன்பு ; அன்பு மயமாகவே இருந்தார்கள்.

அடிகளார் இறைவனடி எய்திய ஞான்று ஈழமாநாடும், தமிழகமும், தமிழ்ச்சங்கங்களும், பல்கலைக்கழகங்களும், துன்பக்கடலுள் ஆழ்ந்தன.

" முத்தமிழ்ப் பேராசிரியர் மறைந்தார் ; முதற் றமிழ்ப் பேராசிரியர் மறைந்தார் ; கணித விஞ் ஞானக் கலைஞர் மறைந்தார் ; தென்முனைக் கதிரொளி சிவனடி சேர்ந்தது ; சிவஞான செல்வர் சிவபதம் அடைந்தார் "
என்று புலம்பின செய்தித்தாள்கள்.

ஆண்டுதோறும் அத்திருநாளில் அடிகளார் வாழ்க்கையினையும் தொண்டினையும் நினைப்பது நன்று. “நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே”.

செந்தமிழ், ஆங்கிலம், ஆரியம் என்னும் மொழிப்புலமையும், இலத்தீன், யவனம், வங்கம், சிங்களம், அரபு என்னும், மொழிப்பயிற்சியும், கணித விஞ்ஞானத்திறனும் வாய்ந்தஅடிகளார், தமிழ்மொழி வழியே பலகலைகளையும் பரப்ப எண்ணினார்கள்; கலைச்சொற்களை ஆக்கினார்கள். எனினும் “மதங்கசூளாமணி” என்னும் நடாகத் தமிழினையும், “யாழ்நூல்” என்னும் இசைத் தமிழினையுமே, உலகினுக்கு நிறைவுற அளிக்க இறைவன் திருவுளங் கொண்டான் போலும்!

**மதங்கசூளாமணியாம்** ஞானசம்பந்தப் பெருமான் இன்னிசைவழியே நற்றமிழ் பரப்பியவாறு, யாழ்–நூல் என்னும் இசைநூல் வழியே தமிழரின் நாகரிகச் சிறப்பினை உலகினுக்கு உரைத்த உயர்தனிப்புலவர், தமிழ் அன்னைக்கு ஆற்றிய தொண்டு பெரிது! பெரிது! **யாழ்நூலின் ஆங்கிலப் பெயர்ப்பும், திருக்குறள் விளக்கம், தமிழ் வரலாறு** என்னும் ஆங்கில நூல்களும், **விவேகா நந்த ஞானதீபம், நரேந்திர காவியம், விஞ்ஞான தீபம், மேற்றிசைச் செல்வம்** என்னும் தமிழ்ப் பெருநூல்களும் நிறைவுறு முன்னர், ஏழிசையாய், இசைப்பயனாய் விளங்கும் இறைவன் அடியினை அடிகளார் சார்ந்தது தமிழ் மக்கள் செய்த தவக் குறைவேயாம்.

மாத்துறை முதல் திருக்கைலாயம் ஈருக யாத்திரை செய்த ஆத்திரையன் முத்தமிழ்ப் பேராசிரியன் ஆகிய அடிகளார் புரிந்துள்ள முத்தமிழ்த் தொண்டுகள் அளப்பில. தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் எழுதிய இயலிசை நாடகக் கட்டுரைகளும், கணித விஞ்ஞானக் கட்டுரைகளும் பலவாகும்; அன்றியும் இந்தியாவிலிருந்து வெளிவரும் ஆங்கிலப்பத்திரிகைகட்கும் ஆங்கிலக் கட்டுரைகள் எழுதித் தமிழ் மக்களின் பெருமையினை ஆங்கிலவுலகமும் அறியச் செய்வாராயினர்.

அடிகளார் எழுதிய வேதாந்த சித்தாந்தக் கட்டுரைகள் பல; ஆங்கிலம், இலத்தீன், வங்காளம் என்னும் மொழிகளிலிருந்து தமிழிற் பெயர்த்த செய்யுள்கள் பல. இளைஞரும், கவிஞரும் நயக்கும் தன்மைவாய்ந்த செய்யுள்கள் பல. அடிகளார் பாடியருளிய **ஆங்கிலவாணி** அழகுமிக்க அருந் தமிழ்ச் செய்யுளாகும்; இவர் பாடல்களுட் பல, நல்லிசைப் புலவர் போற்றும் சங்கச் சான்றோர் பாடல்களை நிகர்ப்பன.

அடிகளாரின் பெருமை ஈழநாட்டிற்குப் பெருமையை அளித்துள்ளது. இரகுவமிசம் என்னும் தமிழ்க்காப்பியத்தை அருளிய ஈழநாட்டுக் கம்பராம் அரசகேசரியாரும், ஞானசாஸ்திரங்களை நல்கியவரும், சிவஞானசித்தியாருக்கு உரைகண்டவரும் ஆகிய யாழ்ப்பாணத்து ஞானப்பிரகாச முனிவரும், நற்றமிழ் தந்த நாவலர் பெருமானும் **ஒரு வடிவு** கொண்டாற் போன்று 1892–ஆம் ஆண்டு பிறந்தருளினர் அடிகளார்.

அடிகளார் பிறந்த ஊர் மட்டக்களப்புக் காரேறு மூதூர். திருக்கோவில்கள் பலவுள்ள திருவூர். இதனை சீரேறு கஞ்சமலர்ச் சேயிழை நீங் காதுறையும் காரேறு தீவு” என்றுளார் அடிகளார்.

மட்டக்களப்பு இலங்கையின் கீழ்பால் விளங்குவது; பலவளங்களும் பொருந்தியது. இந் நாட்டிலே கண்ணகியார் கோயில்கள் பலவுள; இவற்றுட் பல கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன் காலத்தன. இப்பெருந்தொன்மை வாய்ந்த கண்ணகி கோயில்களுள் ஒன்று காரேறு மூதூரிலும் உண்டு. அடிகளார் பிறந்த இல்லம் அக்கோயிலுக்கு அண்மையில் உள்ளது. அடிகளாரின் தந்தையார் பெயர் **சாமித் தம்பியார்;** தாயார் பெயர் **கண்ணம்மையார்.** கண்ணம்மையாரின் தந்தையார் இராஜகோபாலபிள்ளை; இவர் யாழ்ப்பாணத்து உடுவிலைச்சேர்ந்த இராமநாதனுர் குமாரர் வயிரமுத்துவின் மகனுவர். கண்ணம்மையாரின் தாயாரின் தாயார் யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சேதுநாதரின் புதல்வியார்.

அடிகளார் பிறந்த பொழுது தாய் தந்தையார் இட்டபெயர் **மயில்வாகனம்** என்பது. இருமுதுகுரவர்க்கும் அன்பனாய் வாழ்ந்த மயில்வாகனனுர்க்கு எழுதறிவித்தவர் குஞ்சித் தம்பி ஆசிரியர். தமிழும் வடமொழியையும் கற்பித்தவர் தக்ஷணகைலாசபுராணப் பதிப்பாசிரியர் யாழ்ப்பாணத்துப் புலோலியம்பதி **வைத்தியலிங்க தேசிகர்.** இவர்களுக்குக் கணிதத்திற் சுவை ஊட்டியவர்; கணித கலாநாயகர் **தில்லைநாயகம் B. A.**

மயில் வாகனனுர் கேம்பிரிட்ஜ் ஸீனியர் பரீட்சையிற் சித்தி எய்திய பின், சிலகாலம் ஆங்கில ஆசிரியராய் இருந்தார். பின்னர் கொழும்பு அரசினர் ஆங்கில ஆசிரியர் கல்லூரியிலும்,

விஞ்ஞானப் பயிற்சிக் கல்லூரியிலும் பயின்று தகைமை வாய்ந்த ஆங்கில ஆசிரியர் ஆயினர்.

கொழும்பிற் கலைபயிலுங் காலத்தில் **வித்துவான் கோவை கந்தையாபிள்ளை** அவர்களிடத்தும், மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பெரும் புலவர்களுள் ஒருவராகிய, **வெள்ளியந்திரு மலை கிழார் சிற். கைலாசபிள்ளை முதலியார்** அவர்களிடத்தும் தமிழ் பயின்று, மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சையிற் சித்தி எய்தினர். பண்டித பரீட்சையில் முதன் முதற் சித்தி பெற்றவர் இவரே. ஆதலால் இலங்கையில் இவருடைய பெயரையும் ஆற்றலையும் பலரும் அறிவாராயினர்.

பின்னர் லண்டன் சர்வகலாசாலைப் பிரவேச பரீட்சை, மத்திய பரீட்சைகளிற் சித்தி எய்தி விஞ்ஞானக் கலை மாணிப்பட்டமாகிய B. Sc. பட்டமும் பெற்ருர்.

கலைமாணிப் பட்டம் பெறுமுன்னரே யாழ்ப்பாணத்துத் திரு. பத்திரிசியார் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராயமர்ந்தார். அக்காலத்தில், யாழ்ப்பாணத்தில், சைவத் தொண்டும், தமிழ்த் தொண்டும் புரிந்த பெரியார்களுள் ஒருவராய் விளங்கினர். இளைஞர் பலர் இவரின் பிரசங்கங்களைக் கேட்டதன் பயனாக தமிழ் நூல்களையும், சைவ நூல்களையும் பயில்வாராயினர். ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தை நிறுவியவர்களுள் ஒருவராவர். அக்காலத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரிப் பொறுப்பாளர் இவரைப் பிரதம ஆசிரியராக நியமித்தனர்.

விவேகாநந்த சுவாமிகளையே குறிக்கோளாகக் கொண்டிருந்த மயில்வாகனருக்கு அருண்மிகு **சர்வாநந்த சுவாமிகளின்** நட்புக்கிடைத்தது. மயில்வாகனர் துறவு நிலையினை விரும்பி இந்துக்கல்லூரியினின்றும் நீங்கி, இந்தியாவுக்குச் சென்று ஸ்ரீராம கிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்தார்கள். இவர்க்குச் சந்நியாச தீட்சை அளித்தார் **அருண்மிகு சிவாநந்தர்** அடிகளார் தம்குருவினிடத்தில் ஆழ்ந்த பக்தி வாய்ந்தவர்.

பன்மொழிப்புலவர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனர் அடிகளாரைப் பற்றிச் சொல்லுமிடத்து

**“இந்த நூற்றாண்டில் எழுந்த தென்முனைக் கதிரொளி மயில்வாகனராய், பிரபோத சைதன்னியராய், விபுலாநந்தராய் விளங்கியது. மேல் நாட்டுக் கலைகளைத் தமிழிலே அறிவுறுத்தி விஞ்ஞானத்தினையும் செந்தமிழாய்த்துய்க்க உதவிய பேரொளி இதுவேயாம்”**

என்று கூறியுள்ளார்கள்.

---

## புதியன புகுதல்....

(16 ம் பக்கம் தொடர்ச்சி)

னேழு மொழிகளிலிருந்து வந்தவற்றைத் திசைச் சொற்களாகத் தழுவிக் கொண்டார். இப்போது நாம் உலகத்தில் எந்தப் பிற மொழியிலிருந்து வந்து தமிழில் கலந்து தமிழேயாகி நடந்தாலும் அவற்றைத் திசைச் சொற்கள் என்று இலக்கணம் செய்து அமைத்துக் கொள்வதுதான் முறை.

“பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினனே,” என்ற சூத்திரம் அதற்கு இடம் தரும்.

ஒருமை, பன்மையைப் பற்றிய இலக்கணத்தில் கூட சில புதிய வழக்காறுகளையும் அமைத்துக் கொள்ள வேண்டிய நிலை இப்போது வந்திருக்கிறது. ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைப் பன்மை என்று சொல்வது தமிழ் மரபு. ஒருவன் என்பது ஒருமை ; ஒருமைப் பெயரை வாக்கியத்தில் வைத்துச் சொன்னல் அதன் பயனிலையும் ஒருமையாகவே இருக்கவேண்டும். ஒருவன் வந்தான் என்று சொல்கிறேம். வந்தான் என்ற பயனிலையும் ஒருமைதான். இருவர் வந்தார் என்றல் அதிலுள்ள இரண்டு சொற்களும் பன்மைச் சொற்களே.

சில சமயங்களில் ஒருமையாக உள்ள பொருளையே பன்மையாகச் சொல்வதுண்டு. உயர்வாகக் கூறும் போது, மரியாதையாகச் சொல்லும்போது, அப்படிச் சொல்கிறேம். அவர் வந்தார் என்கிறேம். ஒரு மனிதரையே அப்படிச் சொல்கிறேம். பல மனிதர்களையும் அப்படிச் சொல்லலாம். இரண்டுக்கும் உள்ள வேறுபாடு, சொல்லும் சந்தர்ப்பத்தால் விளங்கும்.

குமரன் வந்தான், குமரர் வந்தார், குமரனர் வந்தார், என்று மூன்று வகையில் ஒருமனிதரையே குறித்துச் சொல்லலாம்.

# இலங்கைக் குறவர் திருமணம்


எஸ். வி. ஓ. சோமநாதர்
(தமிழாக்கம் : அ. தெய்வேந்திரன்)

இலங்கைக் குறவர் என்றென்றும் சந்தோஷமாக வாழும் ஒரு சாதியினராவர். இவர்கள் அலைந்து திரிந்து காலம்போக்கும் வழக்கமுடையவர்களெனினும், வாழ்க்கையிலே ஏற்படும் பிரச்னைகளையும், கஷ்டங்களையும் வந்தால் வரட்டும், போனால் போகட்டும் என்று எள்ளிநகையாடிவிடுவதில் வெகு சமத்தர்கள் என்று கூறிவிடலாம். நாகரீகமடைந்து விட்டோமென்று கருதும் மக்களுக்கு இக்குறவரது வாழ்க்கை உண்மையிலேயே வெட்கமளிக்கத்தக்கதாகும். ஊர் ஊராகத் திரியும் இக்குறவர் மணமுடிக்கும் வேளையில், அவர்கள் வதியும் தூரந்தொலைவிலுள்ள காட்டுக் குடிசைகளில் ஒரே கும்மாளமும் கூத்துமாக இருக்கும். இதில் ஏதாவது சந்தேகமிருந்தால், குறவர் மணநாட்களில் ஒரு காட்டுக் கிராமத்துக்கு சென்று, அங்கு நடப்பவற்றைப் பாருங்கள். மணமகனைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பு குறவரைப் பொறுத்த மட்டில், பெற்றோரையே சார்ந்ததாகும். இவர்களது கலியாணக் கொண்டாட்டங்கள், பசும்புற்றரையில் ஒன்றுக்கொன்று அணித்தாக நிறுவப்படும் இரு பந்தர்களிலே நடைபெறுகின்றன. நெருக்கடியும், சந்தடியும் மிகுந்த நகரங்களில் வசிப்பவர்கள், காட்டில் நடக்கும் குறவர் திருமணக் காட்சிக்குச் சென்றால், அங்கு ஓர் அமைதியான சூழ்நிலையிலே முன்னொருபோதும் கண்டிராத நூதனமான கல்யாணத் திருக்கோலங்களையும், களியாட்டங்களையும் கண்டு மகிழலாம்.

இந்தக் குறவர் திருமணத்தில் இடம்பெறும் சில ருசிகரமான சம்பவங்களைப் பட விளக்கங்களுடன் ஈண்டு விவரிக்கின்றேன் :—



கழுத்திலே மணி மாலைகளையும், கைகளில் நிக்கல் வளையல்களையும், விரல்களில் மோதிரங்களையும் அணிந்து, புன்னகை பூத்த முகத்துடன் உலக்கை பிடித்து நிற்கும் இக்குறத்திகள் மூவரும் சோளம் விதைகளில் மாவிடிக்கின்றனர். கலியாண விருந்தில் "சோளங்களி" முக்கிய இடம் பெறுகிறது. இந்த மூன்று பெண்களும் கலியாணப் பெண்ணின் மச்சாள்மாராவர்.



கலியாணத் தினத் தன்று இறைச்சி யில் லாத விருந்து ஒரு விருந் தல்ல என்பது குறவரின் சித் தாந்தம். இத ஞல் குறக்கிழ வர் ஒருவர் இன்னெரு இளைஞரின் உதவியுடன் பக்கத்துக் காட் டில் கொன்று கொண்டுவந்த ஒரு பன்றியை உரித்து இறை ச்சி எடுக்கிறுர். துவக்கை உப யோகியாது வேட்டை நாயி ஞுதவியுடன் ஈட்டியால் மிருகங்களைக் கொல்வதில் குறவர்கள் தனித்திறமை படைத்தவர்கள்.



சாராயம் என் ருல் குறவ ருக்கு ஒரே குஷி. நகரத்தி லுள்ளவர் களைப்போன்று விஸ்கி, பிற ண்டி குடிப்ப தற்கு இவர்க ளுக்கு வசதியு மில்லை; வழியு மில்லை. கிரா மந் தோறும் அலைந்து பாம் பாட்டிப் பணஞ் சேக ரித்து வீடு திரும்பும் ஐந்து குறவர் கள் தமது சேரி யிலே நடக்கும் கலியாணத்துக் குப் போகுமுன் வழியிலுள்ள ஒரு சாராயக் கடைக்குச் சென்று சாராயம் அருந்துகின்றனர். கலி யாண வீட்டில் கலகலப்பாய் இருப்பதற்கும், கூத்தாடி மகிழ்வதற்கும் எப்படியாவது சாராயம் அருந்திவிட வேண்டுமென்பது இவர்களுடைய ஒரே ஆசையாகும்.




★

மாப்பிள்ளை இதோ புறப்பட்டு விட்டார். தலையிலே தலைப் பாகை ; கழுத்திலே மணி மாலை ; கையிலே காப்பு ; விரல்களிலே மோதிரம் ; தோளி லே சால்வை ; படத்தில் வலது புறமிருந்து இரண்டாவதாக நிற் பவர்தான் மாப்பிள்ளை. தோ ழர்களால் மணமகள் வீட் டுக்கு அழைத்துச் செல்லப் படுகிறார்.

★

இதோ காட்சியளிக்கிறாள் மணமகள்; கலியாணத்துக்கு முதல் நாள் இவளுடைய குடிசைக்குச் சென்றிருந்த படப்பிடிப்பாளருக்கு தனது சீதனங்களையெல்லாம் கொண் டுவந்து காட்டுகிறாள். இவ் வளவு சீதனமும் தன் வாழ்க் கைக்குப் போதுமென்று நினைக் கும் அவள் முகத்தில் புன்ன கை தவழ்கிறது. உரல், உலக் கை போன்ற சமையல் தள பாடங்களை விட, உயிர்ப்பாம் பைக் கொண்ட பிரப்பம் பெட் டியும், பாம்பை ஆட வைக்க உதவும் மகுடியும், புருஷன் வேட்டை யாடுவதற்கான ஒரு ஈட்டியும், மான், பன்றி, உடும்பு போன்றவற்றைக் கலைத்துச் சுற்றி வளைக்க உதவும் ஒரு நாயும் தனது புதிய வாழ்க் கையை ஆரம்பிக்கப் போது மானவையென்பதை அவள் முகம் காட்டுகிறது. ஆயிரக் கணக்கிலும், இலட்சக் கணக் கிலும் ரொக்கமும், பொருளு மாய் கேட்கும் வழக்க முடைய டாக்டர்மார், வழக்கறிஞர்கள், எஞ்சினியர் போன்றோர் இந் தக் குறவரிடமிருந்தாவது ஒரு நல்ல பாடம் படிப்பார்களா ?





மணப் பெண்களின் தகப்பன்மார் எவ்வளவு பணக் காரரென்பதை அவர்களிடமுள்ள நில புலன்களையும், பணத் தையும், இதர பொ ருட்களையும் கொண்டு கணக்கிடுவது சாதா ரண வழக்கம். ஆனல் குறவரிடம் அதெல்லாம் இல்லை. பெண்ணின் தகப்பனிடம் உள்ளமாடு கள் தாம் அவரின் செல் வத்தைக்கணக்கிட உதவு கின்றன. இப்படியான பணக்காரக்குறவர் மாடு களையும் சீதனமாகக் கொடுப்பர். குறச்சாதி யினர் பசுப்பால் குடிப்ப துமில்லை. மாட்டிறைச்சி உண்பதுமில்லை. கொழு த்த மாடுகளைச் சிலர் இறைச்சிக் கடைக்காரருக்கு விற்பதுண்டு. வேறுசிலர் கமக்காரருக்கு வயல்களில் எருச் சேர்வதற்காக மாடு களைக்கூலிக்கு விட்டு சொற்ப பணம் வாங்குகிருர்கள்.

★

வெட்கத்தினுல் தலைகுனிந்து நிற்கும் மண மகள் கோடுபோட்ட பருத்திச் சேலையுடுத்தி, மூக்குத்தி, கைவளையல், மோதிரங்கள் என்ப வற்றையணிந்து தனது கணவனின் பக்கத்தே நிற்கிருள். மணமகனும் பட்டுத் தலைப்பாகை, கோடுபோட்ட சாரம், சால்வை என்பவற்றை யணிந்து பெண்களைப் போல கழுத்தில் மணி மாலை தரித்துக் காணப்படுகிருர். புகைப்படக் கருவியின் "கிளிக்" சத்தம் கேட்டதும், இவர் களிருவரும் வெருண்டு கண்களை மூடிக்கொண் டனர்போலும். அல்லது காதலுக்குக் கண்ணில்லை யென்று மற்றவர்களுக்குக் காட்ட நினைத்தனரோ! யார் அறிவார்?



★

கவியாண வீடைன்றுல் வதாவதொரு மங்கள கரமான வாத்தியம் ஒலிக்க வேண்டுமென் பது குறவருக்கும் தெரியும். எனவே வேடிக்கை உடையணிந்து ஓரிருவர் தப்பு என்ற மேளத் துக்கியைய இதோ நடனமாடத் தயாராகின்றனர். தப்பு என்ற மேளம் குரங்குத் தோலில் அல்லது வெள்ளாட்டுத் தோலில் செய்யப்படுகிறது. இரண்டு கைகளிலும் தடிபிடித்துத் தப்படிப்பதில் குறவர்கள் நல்ல தேர்ச்சி பெற்றவர்களெனலாம்.





புதுத்தம்பதிகளின் நற்சுகத்துக்காக அவர்களை வாழ்த்திக் குடிபபவர்கள்போல, இநதக குறவாகள் சற்று அதிகமாகக் குடித்துவிட்டு சிரித்துக் கூத்தாடி மகிழ்கினறனர். மதிமயக்கத்தில் கலியாண ஆடைகளைக் கழற்றி விட்டுச் சாதாரண உடைகளுடன் காணப்படுகின்றனர். தாங்கள் பெரிய வேட்டைக்காரர் என்பதை நிரூபிக்க ஈட்டிகளையும் எடுத்துக் கையேந்திக் காட்டுகிறார்கள். இவர்களிலொருவன் முதனாளிரவு பிடித்து வந்த ஒரு உடும்பை நடுவே நிற்கும் இளைஞன் தூக்கிக் காட்டுவதைக் காண்க.




கலியாண வீட்டுக்கு வரும் பெண்கள் சிரிக்கத் தவறுவதில்லை யல்லவா ? அவர்களுக்குக் கொஞ்சம் குடிக்கக் கொடுத்து விட்டால் ஆண்களே அங்கு இருக்க முடியாது போய்விடும். தங்களிடமுள்ள நகை நட்டுக்களையெல்லாம் பெருமையுடன் அணிந்து, தம்மை அலங்கரிக்க வேண்டுமென்ற ஆசை கலியாண வீட்டுக்குச் செல்லும் பெண்களுக்கு ஏற்படுவது இயற்கைதான் என்பதை இக்குறத்திகளே நிரூபிக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் கலியாணம் வராதாகையால், இன்று விடிய விடியக் குடித்துக் கூத்தாடி விடுவோமென்று ஒரு கட்டழகி கூறுகிறாள்.

★

குறவன் பாம்பாட்டிப் பணஞ் சேர்க்கச் சென்று விட்டான். குறத்தி வீட்டு வேலைகளை முடித்து விட்டு வெயில் அதிகமாயிருப்பதால் மரக்கொப்பிலே கட்டப்பட்டுள்ள ஊஞ்சலில் பிள்ளைகளோடு உட்கார்ந்திருக்கிறாள். அடுத்த வீட்டுச் சிறுமிகள் ஊஞ்சலாட்ட வந்து விட்டார்கள். அசைந்தாடும் தென்றலில் ஊஞ்சல் முன்னும் பின்னும் போய்வருகிறது. கவலையே இல்லாத இக்குறத்தி கணவன் வருகையை மாத்திரம் காத்திருக்கிறாள்.

★





பிள்ளைக்குப் பாலூட்டிய பின் வீட்டு முற்றத்திலுள்ள மரத்தில் கட்டித் தொங்கும் ஏணத்தில் பிள்ளையை வளர்த்திவிட்டு வீட்டு வேலை பார்க்கச் சென்றுவிட்டாள் தாய். ஆனால், பேரப்பிள்ளையைக் கவனிக்க இதோ பாட்டி வந்து விட்டாள். அதைப் பார்த்து மகிழ்வதைவிட அவளுக்கு வேறு வேலை என்ன இருக்கிறது ? மாமி மருமகள் சச்சரவு கூட குறவர் மத்தியில் இல்லை யென்றே சொல்லலாம்.

# தேவபாணி

அருட்டிரு விபுலானந்த அடிகளார்

மலையரசன் திருப்பாவை வாணுதலா ளுளமகிழுங்
கலையரசே கற்றோர்கள் காதலிக்குங் கற்பகமே
நல்லறத்தின் தனிமைந்தன் நானிலங்கா ரணமாக
வில்லறத்தின் வழிநின்ற விறற்சரிதங் கிரிப்புறத்தில்

ஏழுதுகரு ணீகறின திணையடியே புணையாகப்
பழுதில்கலைக்கடலென்னும் பரவையினைக்கடப்பேமால்
திருநாரை யூர்வாழுந் திருவாளா அருளாளா
பெருநாரை பெருங்குருகு பேரிசையே சிற்றிசையே

உருவாய தமிழகத்தி லுயர்மூவர் தெய்வஇசை
வருமாறு பணித்ததுவும் மன்னியநின் னருளன்றோ
முத்தமிழும் பெருக்கியசீர் முதல்வனூர் திருக்குமரா
பத்தியுடன் பணிபவர்க்குப் பலகலையும் பாலிக்கும்

சித்திபுத்தி நாயகனே திருமுறைகள் தமிழகத்தில்
நித்தநிலை பெற்றதுவும் நின்னருளின் திறனன்றோ
திருக்கிளருஞ் சோழமன்னர் தேவாரத் திருமுறைகள்
இருக்குமிட மெதுவென்ன வியம்புதியென் றுனைப்
பணிந்து

வருக்கைநறுந் தேன்கதலி யெல்லுண்டை யப்பமவல்
பெருக்கவவர் கருத்துமுற்றப் பெற்றதுநின் னரு
ளன்றோ

என வாங்கு,

திருந்திய தமிழாற் சேவடி பரவுதும்
தெய்வத் தமிழிசை வையத் துயர்வுற
பத்தர் கோடே நரம்பே யாப்பென
வைத்த வுறுப்பு வளம்பெற மன்னி
செம்மை படுமலை செவ்வழி யருமை
கோடி விளரிமேற் செம்பா லையென
ஏழ்பெரும் பாலையு ளியன்ற நல்லிசை
சீரே பாணி தூக்கன நின்ற
முத்திறத் தானமு மெத்திறத் தோரும்
கேட்டுமகிழ் வெய்தப் பாட்டி னியலும்
பண்ணினியலு மெண்ணியாய்ந் துரைக்கும்
யாழ்நூல் பொலிவுற் றேழிசை பரப்புக
மழைவளஞ் சுரந்து மன்னுயி ரோங்குக
நின்னடி பணிந்த இராமன் சீர்மிக
நல்லோர் அவைக்களம் நாளும் பொலிக
பேரையூர் மன்னிய சீருடைச் செல்வ
அம்பாள் குளத்தி லணிபெற அமர்ந்த
பொய்யா விநாயக, பூரண, என்றே

[ஆலயத்திருப்பணியே ஆண்டவன் சேவை யெனக் கருதி, திருக்கொள்ளம்பூதூர் முதலிய கோயில்களை, இருபத்தைந்து நூறுயிரம் வெண் பொற் காசுக்கு மேலும் செலவிட்டுத் திருப்பணி செய்த திருவாளர் **பெ. இராம. இராமன் செட்டி யார்** அவர்கள் முன்னோர்கள் தொடக்கமாக வழி பட்டு வருகின்ற கடவுள், பொய்யாத விநாயகர். இவர் எழுந்தருளியுள்ள கோயில், புதுக்கோட்டைக்கு மேற்கில் ஆறுகல் தொலையில் உள்ளது. இக்கோ யில் பேரையூர் அம்பாள் குளக்கரையில் உள்ளதா கும். இக்கோயிலை நோக்கிச் செல்லும் சாலை, இரு மருங்கும் தவிர்த்தவர்க்குத் தலையாலே நீர் தரும். கற்பகக்கா நிறைந்தது. இச்சாலை வழியே சென்றால் மூத்தபிள்ளையார் உறைவிடம் காணப்பெறும். இவ் விடம் மிக்க அமைதியானது. ஆரவாரமில்லது. கோயிலின் நான்கு பக்கங்களும் அரசு, ஆல் முத லான மரங்கள் அடர்ந்து குளிர்ந்த நிழலைத் தந்து கொண்டு இயற்கையழகோடு விளங்குகின்றன. இதன் பாங்கர் நந்தவனந் தீர்க்கும் நந்தவனம், ஆண்ட வனை வழிபாடு செய்தற்குரிய நறுமலர்களைத் தந்து நிற்கின்றது. இத்தகைய அழகுடன் விளங்கும் ஆண்ட வனைக் காண்பதற்கு அறச்செல்வர் திரு. இராம. சிதம் பரம் செட்டியார் அவர்களோடு சென்ற அருட்டிரு விபுலானந்தர் அவர்கள், மூத்தபிள்ளையாரின் முக மலர்ச்சியிலீடுபட்டு, அவ்விநாயகர் மீது தேவபாணி யென்ற இத்தோத்திரப்பாவை யியற்றி யருளினார்கள். இஃது அவ்வாண்டவன் முன் பாடப்பெற்றது. இத் தேவ பாணி பின் நிகழ்ந்த யாழ்நூல் அரங்கேற்று விழாவிற்கு விடை (அனுக்ஞை) பெற்ற முறையில் அமைந்தது. —**தமிழ்ப் பொழில்**

### விபுலானந்தவடிகள் நினைவு

—(நவாலியூர் திரு. க. சோமசுந்தரப் புலவர்)—

திங்களுங் கங்கையும் பொங்கரவு மணிகின்ற
சிவபிரா னருளினாலே
செந்தமிழ் வழங்குமெம் புண்ணியத் திருநாடு
செய்தவத் தாற்பிறந்தாய் ;
சங்கமுத் தமிழுமங் கிலமுமா ரியமுமாந்
தாவில்மொழி கற்றுயார்ந்தாய் ;
சைவசித் தாந்தத் துவஞான சமரசச்
சன்மார்க்க நிலையில் நின்றாய் ;
எங்கணு மிசைக்கதிர் விரித்திரு ளகற்றிடும்
ஞானசூ ரியனுகினாய்

(31 ம் பக்கம் பார்க்க)

# சோதிட நிலையம் நிறுவுக

கல்வளை திரு. வே. சுவாமிநாதன்

ஒரு தேசத்திற்கோ தனி மனிதனுக்கோ பிராரத்துவ, ஆகாமிய, சஞ்சித கர்மத்தால் நிகழக்கூடிய பலன்களை முன்னதாகவே அறிந்து, வரப்போகும் கஷ்டங்களைச் சாந்தி செய்வதற்கே, வேதத்தின் ஓர் அங்கமாகிய சோதிட நூலில் மணி மந்திர அவுடதங்கள் கூறப்பட்டுள்ளன.

முன் வட இலங்கையை ஆட்சிபுரிந்த பல்லவ சோழ பரம்பரையில் வந்த செகராசசேகர மன்னன், அரும் பாடுபட்டு நல்லூரில் ஓர் சோதிட நூல் நிலையத்தை ஸ்தாபித்து, செகராசசேகர மாலையென்னும் அரிய சோதிட நூலையும் பாடிவைத்தான். போத்துக்கீசரும், ஒல்லாந்தரும் வட இலங்கையைக் கைப்பற்றிய காலத்தில், சைவக்கோவில்களை இடித்தும், சைவ சமய ஏட்டுச் சுவடிகளை எரித்தும் கிறீஸ்தவ ஆலயங்களைக் கட்டியும், இங்குள்ள அனைவரையும் கிறீஸதவர்களாக்கி, சட்டப்படி தலைத்தோம்பும் எழுதி வைத்தனர்.

அக் காலத்தில் ஞானப்பிரகாசர், வரணித்தில்லைநாதர், நல்ல மாப்பாண அதிகாரி மகன், தாயுமான சுவாமியின் பேரன் போன்ற பலர் தங்கள் கையில் கிடைத்த ஏட்டுச் சுவடிகளை தொண்டை நாட்டிலுள்ள வேதாரணியம், காரைக்கால், சிதம்பரம், மயூரம் போன்ற ஊர்களுக்கு எடுத்துச் சென்று காப்பாற்றினர்.

இவர்களால் அழிந்து போகாது காப்பாற்றப்பட்ட சைவ சித்தாந்த நூல்களே, பின்வந்த பெரியார்களான ஆறுமுகநாவலர், கிங்ஸ்பெரி தாமோதரம் பிள்ளை, சுவாமிநாதஐயர் போன்றவர்களால் அச்சேற்றி வைக்கப்பட்டன.

சமய நூல்கள் காப்பாற்றப்பட்டதுபோல், சில சோதிட நூல்களையும், அக்காலம் நல்லூரில் வசித்த பிரமாணப் பெரியார், இந்தியாவிலிருந்து வியாபாரத்திற்காக இங்கு வந்த ஒருவர் கையில் ஒப்படைத்தார். இந்த சோதிட ஏற்டுச் சுவடி இன்று திருநெல்வேலியில் கோவிந்த நாராயணபிள்ளை வசம் இருக்கிறது. இதை யாழ்ப்பாண வாக்கிய பஞ்சாங்க ஆக்கியோன், இ. சி. இரகுநாதஐயரும், நானும் வாசித்துப் பார்த்தோம். அதில் எங்கள் சாதகத்தில் கூறப்பட்ட கிரக நிலைப்படி பலன்கள் ஒத்திருக்கின்றன. வருத்தங்களுக்குச் சாந்தியாய்ச் சொல்லப்பட்ட, மணி மந்திர, அவுடதம், மிக அற்புதமானது. அயனும்ஷம் வரரிஷி வாக்கியத்தையும் உடுதசா புத்தி சித்திரம், ஷம்சோத் தாதி திசைப்படி, சௌரமான வருடப்படி கணிக்கப்பட்டுள்ளது. இது வரை அச்சேறிய சோதிட நூல்களில் கூறப்படாத பிரமாணங்களால், ஆதாரம்காட்டி பலன் சொல்லப்பட்டுள்ளது.

இது போல் வேறு ஏடுகள் மயூரம், வயித்தீஸ்வரம் முதலிய தொண்டை நாட்டிலும் கண்டேன். அவை முருகனைக் குல தெய்வமாய் வைத்துப் பாடப்பட்டுள்ளன.

வேறு சில வைத்திய சோதிட ஏடுகள் யாழ்ப்பாணத்தில் அக் காலத்தில் கொங்கு நாட்டிலும், கோவா பட்டினத்திலுமிருந்து கிறிஸ்து சமயத்தைப் போதிப்பதற்காக போத்துக்கீசருடன் வந்த கிறீஸ்தவ போதகர்கள் கையில் அகப்பட்டன. கொங்காப் பட்டர், கோவா பட்டர் என்று அழைக்கப்பட்ட இக் கத்தோலிக்க போதகர், ஒல்லாந்தர் காலத்தில் ஹூதறின் மிஷனரிகளாகி விவாகம் செய்ய நேரிட்டபோது தம் குலத்தில் பெண் இல்லாமையால் கொல் கொண்டா, ராமநாதபுரம் ஆகிய இடங்களிலிருந்து வந்து குடியேறியிருந்த பரதேச வணிக, அகம்படிய குலப் பெண்களை விவாகம் செய்தனர். ஒழுக்கத்தாலும் அறிவாலும் சிறந்த இத்தவ சிரேஸ்டர் ஒல்லாந்த அரசின் அரச வைத்தியராகவும் பின் கொம்மாண்டர் சுவாடக்குறேன் காலத்தில் வண்டிக்கடுக்கனும் முதலிக் கொண்டையும் கட்டி அதிகாரிகளாயிருந்த தொண்ட மண்டல முதலிமார் குலத்திலும் விவாகம் செய்து அதிகாரிகளுமாயினர்.

இவர்கள் கைவசம் இருக்கும் ஏட்டுப் பிரதிகளையும் திருநெல்வேலி தொண்டை மண்டலம் முதலிய இடங்களில் இருக்கும் ஏட்டுப் பிரதிகளையும் காசு கொடுத்தாகிலும் எழுதுவித்து அச்சேற்றுவிக்கும் கடமை, சோதிட அபிமானிகளையும் வடஇலங்கைச் செல்வர்களையும் பொறுத்தது. செகராசசேகர மன்னன் ஞாபகத்திற்காக ஒரு சோதிட நூல் நிலையம் வட இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட பின்பே முறையான சைவவழிபாடு நடைபெறமுடியும்.

# மதிப்புரை

### விபுலானந்த வெள்ளம்

தொகுப்பாசிரியர் : அருள் செல்வநாயகம்

வெளியீடு : ஓரியண்ட் லாங்மன்ஸ் லிமிட்டெட்
36 ஏ—மௌன்ட் ரோட், மதராஸ் 2

விலை : ரூபா 2.25.

விபுலானந்த அடிகள் தமிழுக்காற்றிய தொண்டினை யாவரும் நன்கறிவர். அடிகளாரின் அணுக்கத் தொண்டர் கூட்டத்தினர் பலர் உளர் என்பதையும் நாம் அறிவோம். எனினும் அடிகளாருடன் நெருங்கிப் பழகியவர்கள் இதுவரை அவரைப்பற்றிய நூலையோ அவர் விட்டுச் சென்ற கட்டுரைகளையோ வெளியிடாதிருப்பது வருத்தப்பட வேண்டிய விஷயமாகும். விபுலானந்த அடிகளார் இவ்வுலக வாழ்வை நீத்த காலத்தில், பலர் இவ்வறிஞரைப் பற்றி எழுதப் போவதாகப் பத்திரிகைகளிற் படித்தோம். பின்னர் யாவும் வெறுங் கனவாகிவிட்டது. எனினும், மட்டக்களப்பு குருமண்டு வளியைச் சேர்ந்த **ஆசிரியர் அருள் செல்வநாயகம்** அவர்களின் அயரா உழைப்பினாற்றான் விபுலானந்த அடிகளின் கட்டுரைகள் நூல் உருவில் வெளிவரலாயின. திரு. அருள் செல்வநாயகம் அவர்கள் ஈழநாட்டிலும் இந்தியாவிலும் பல இடங்களுக்குச் சென்று, ஈயானது பல பூக்களுக்கும் சென்று தேனினைச் சேர்ப்பது போல, **விபுலானந்த இலக்கியம்** எனும் தேனினைச் சேகரித்து வைத்துக் கொண்டு, சிறிது சிறிதாக அருந்தக் கொடுத்து வருகிறார்கள். விபுலானந்த இலக்கிய வரிசையிலே, **"விபுலானந்த அடிகள், விபுலானந்த அமுதம், விபுலானந்தத் தேன் விபுலானந்த ஆராய்வுகள், விபுலானந்தக் கவிதைகள்"** என்னும் நூல்களை வெளியிட்டுள்ளதாக திரு. செல்வநாயகம் அவர்கள், தமது முன்னுரையிற் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

விபுலானந்த வெள்ளம் எனும் நூல் "ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயத்தில்" அடிகளார் எழுதிய பல கட்டுரைகளையும் வேறு பல இதழ்களில் எழுதிய கட்டுரைகள் சிலவற்றையும் கொண்டுள்ளது.

"விபுலானந்த வெள்ளம் ஆராய்ச்சி நூல், சமய நூல், இலக்கிய நூல், சிந்தனை நூல், வரலாற்று நூல் இன்னும் பலவகையான நூலென்று சிறப்பித்துச் சொல்லலாம் ; படிக்குந்தோறும் நீங்களே வேறு பெயர்களைச் சூட்டி மகிழ்வீர்கள்" என்று திரு. செல்வநாயகம் தமது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. செல்வநாயகம் அவர்களின் அயரா உழைப்பினைத் தமிழுலகம் பாராட்டாதிருக்க முடியாது. விபுலானந்த அடிகளாரின் கட்டுரைகள் கவிதைகள் யாவற்றையும் தொகுத்து வகைப்படுத்தி தனித் தனி நூல்களாக வெளியிடுவதே சிறந்த பணியாகும். இப்பொழுது வெளிவரும் நூல்களில் அவ்வித வரையறையின்றி, சமயக் கட்டுரைகளும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் சிந்தனைச் சுடர்களும் ஒருங்கே கலந்து காணப்படுகின்றன. விபுலானந்தத் தேனுக்கும், விபுலானந்த வெள்ளத்துக்கும் வேற்றுமையில்லை. இன்னும் அடிகளார் துறவு பூண்பதற்கு முன்னர் பண்டிதர் மயில்வாகனம் ஆகவிருந்த காலத்தில் செந்தமிழில் எழுதிய கட்டுரைகள் இன்னும் நூல் உருவம் பெறவில்லை. திரு. செல்வநாயகம் அவர்கள் இந்த நூலுக்கு முன்னுரை எப்பொழுது எழுதினார் என்பதை அறியக் கூடிய காலக்குறிப்பு எதுவுமில்லை. இத்தொகுப்பு நூலில், கலைச்சொல்லாக்கம், இலக்கியச் சுவை, அறத்துப் பாலாராய்ச்சி, சோழ மண்டலத் தமிழும், ஈழமண்டலத்துத் தமிழும், உயிர்வாழ் உழைப்பு, பாவலர் விருந்து, இளமைப் பருவத்தின் பெரு வனப்பு, யோகமார்க்கம், அருநிதியம் விலை சரசம், மாதவர் நோன்பும் மடவார் கற்பும், மன்னவர் நீதியும், பெரியோர் வாழ்க்கையும் அவரது திருநட்சத்திரங்களும், மானத சக்தியும் காரியசித்தியும், தமிழ் மொழியின், தற்கால நிலைமையும் தமிழரின் கடமையும், மானிடனும் அவன் மனத்தின் ஆற்றலும், சிந்தனை மொழிகள் ஆகிய பதினான்கு விஷயக் கட்டுரைகள் இந் நூலில் இடம் பெற்றுள்ளன. அடிகளாரின் ஆழ்ந்த அறிவினைப் பிரதிபலிக்கும் கூரிய கண்களொடு திகழும் உருவப்படம் அட்டையை அலங்கரிக்கின்றது.

முதலாவது கட்டுரை கலைச் சொல்லாக்க மகாநாட்டில் விபுலானந்த அடிகளார் நிகழ்த்திய தலைமைப் பேருரை என்ற குறிப்பு காணப்படுகின்றது. ஆனால் இத்தலைமைப் பேருரை முழுவதும் வெளிவரவில்லை. இது அரைவாசியில் நிற்பதற்குரிய காரணமும் புலப்படவில்லை. இக்கட்டுரையின் இறுதி வாக்கியம் இது : அம்மரபு நமக்குப் பயன்படுமென்னு மெண்ணத்தினாலே ஈண்டு அதனைத் தருகின்றோம், இதற்குப் பின் உள்ள பகுதியைக் காணவில்லை. இப்பேருரை முழுவதனையும் வெளியிட திரு. செல்வநாயகம் முயல வேண்டும் என்ற நோக்கத்துடனே இதனைக் குறிப்பிடக் கருதினேன். இடை

யிடையே அச்சுப்பிழைகளும் புகுந்துவிட்டன. **எனினும் ஓரியன்ட் லாங்மன்ஸ் கம்பனியார் அழகிய முறையில் முத்துப்போன்ற தெளிவான அச்சுருவத்தில் இந்நூலை வெளியிட்டிருப்பது பாராட்டுதற்குரியதொன்றுகும்.** இந்நூலை அச்சிட்டோர் ஜீவோதயம் அச்சகம், சென்னை 5.

அடிகளாரின் நூல்களை ஒவ்வொன்றுக வெளியிட்டுவரும் திரு. அருட் செல்வநாயகம் தமிழகத்தின் பாராட்டுதலுக்குரியவராகின்ருர். பலர் விபுலானந்த அடிகளாரைப் பற்றி மேடைகளில் ஆண்டுதோறு மேறி வாய்ப்பந்தலிடுவதுடன் அடங்கிவிடுகின்றனர். ஆனுல் நண்பர் செல்வநாயகம், விபுலானந்தப் பூங்காவை அமைக்கும் பணியில் உள்ளன்புடன் ஈடுபட்டு உழைத்து வருகின்ருர் என்பதற்கு இதுவரை வெளிவந்த நூல்களே சான்றுபகரும்.

### தமிழன் எங்கே

ஆசிரியர் : தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை,
ஈழமணி நூற் பதிப்பகம்,
60, குமாரன் இரத்தினம் வீதி,
கொழும்பு 2.

விலை : ரூபா 1.50.

தமிழர்களைத் தட்டியெழுப்பிச் சிந்தனை புரியுமாறு தூண்டும் இந்நூலின் தலைப்புக்கியைய இந்நூல் நுதலிய பொருளும் அமைந்து கிடக்கின்றது. தமிழினத்தின் தொடக்க வரலாறுண்மையினை இற்றைஞான்று அறிய முடியாதவாறு, அது பிற இனத்தவரின் சூழ்ச்சியால் மூடப் பெற்று காலத்திரையால் மறைப்புண்டு கிடக்கின்றது. காலத்திரையைக் கிழித்துக் காரிருள் மண்டிய வரலாற்றுக்களஞ்சியத்தைக் கண்டு வியத்தற்கு ஏற்ற கைவிளக்காக விளங்குகின்றது. “தமிழன் எங்கே” எனும் நூல் விளக்கம். தமிழ் நாட்டின் தனிப் பெருவரலாற்றுக்கு ஊற்று நிலையாய் நிலவக்கூடிய சிலகுறிப்புகளை இந்நூலாசிரியர் நன்கு அலசி ஆராய்ந்துள்ளார். தமிழர் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்புடைய இலங்கை வரலாற்றினையும் இலங்கை மன்னன் இராவணன் வரலாற்றினையும் புதிய கோணத்திலிருந்து ஆராய்ந்து முடிபு கூறியுள்ளார். இலங்கையின் பழைய பெயர் எழு (ஏழ்) என நிரூபிக்கின்ருர். எல்நாடே இலங்கை என்பது இவர் மதம் எல் எல்லமாய் பின் எல்லம் ஈழமாகத் திரிந்தது என்பதை நன்கு விளக்கியுள்ளார்.

தொல்காப்பியர் யாழ்ப்பாணத்தை யடுத்த பகுதியிலே தான் வாழ்ந்தவர் என இந்நூலாசிரியர் கூறியிருப்பது கண்டு பெருமிதங் கொள்ள இடமுண்டெனினும், முடிந்த முடிபாகக் கோடற்குத் துணைச்சான்றுகள் இன்னும் தேவை. யாழ்ப்பாணம் எனும் சொல் ஆராய்ச்சி பற்றி இதுவரை அநேக கருத்துக்கள் வெளிவந்துள்ளன. யாழ்ப்பாணம் என்னும் சொல் “ஏழ்பனை நாடு” என்பதன் திரிபேயாகும். என்பது இந்நூலாசிரியர் முடிபாகும். இது மேலும் ஆராயப்பட வேண்டிய தொன்ருகும்.

இந்நூலுக்குப் பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரை எம். ஏ. எல். டி. அவர்களும், பேராசிரியர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர், எம். ஏ., அவர்களும் சால்புரை அளித்திருப்பதிலிருந்தே, இந்நூலின் சிறப்பு நன்கு புலனுகும். “திரு. கணபதிப்பிள்ளை அவர்களின் ஆராய்ச்சி இருபதாம் நூற்ருண்டின் தமிழின ஆராய்ச்சிப் படைப்புகளுக்கெல்லாம் ஒரு சிகரம் வைத்தாற் போன்றது. அத்துறையில் புரட்சிகரமான ஒரு புதுத் திசை காட்டித் திரும்புமுகமாயும் அமைந்துள்ளது. அதே சமயம் ஆராய்ச்சிகளில் எளிதில் காணமுடியாததெனவும் கவர்ச்சியும் எட்டின் நடையில் மிளிர்கின்றன” என திரு. கா. அப்பாத்துரை கூறியிருப்பது ஈண்டுக் குறிப்பிடற்பாற்று.

திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் பலகாலமாக ஆராய்ந்து கண்ட முடிபுகளைக் கவர்ச்சியான தீந்தமிழ் நடையில், தமிழனத்தாரைத் தட்டியெழுப்பக் கூடிய உணர்ச்சியுடன் எழுதிய நூல். “தமிழன் எங்கே” என்பதில் ஐயமில்லை. மேலும் தமிழர் வரலாற்றினைச் சிந்திக்குமாறு தூண்டும் சிந்தனைச் சுடராகவும் இந்நூல் விளங்குகின்றது. இந்நூலின் அழகிய முறையில் கண்கவர் வனப்புடன் வெளியிட்ட கொம்மேர்ஷியல் அச்சகத்தாரையும் பாராட்டாதிருக்க முடியாது. திரு. கணபதிப்பிள்ளையவர்கள் இந்நூலினைத் தொடர்ந்து தமிழரின் உண்மை வரலாற்று நூலினையும் வெளியிட முயல்வார்கள் என எதிர்பார்க்கின்ருேம்.

### ஈழத்து நாடோடிப்பாடல்கள்

பதிப்பாசிரியர் : வித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசா மட்டுநகர்.

பதிப்பு : ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்.
விலை : ரூபா 1.50.

ஈழநாட்டு நாடோடிப் பாடல்களைப்பலர் காலத்துக்குக்காலம் பத்திரிகைகளில் வெளியிட்டு வந்தனர்

எனினும், அவை நூலுருவாகவெளிவரவில்லை. இத் துறையில் வெள்ளவத்தை திரு. மு. இராமலிங்கம் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின்பயனாகச் சில நூல்களும் துண்டுப் பிரசுரங்களும் வெளிவந்துள் ளன. அடுத்தபடியாக வித்துவான் நடராசா அவர் கள் மட்டக்களப்பில் ஆசிரியத்தொழிலில் ஈடுபட்டி ருந்த காலத்திலும் பின்னரும் தாமும்தமது நண் பர்களும் சேகரித்த நாடோடிப் பாடல்கள் இப்பொ ழுது ஈழத்து நாடோடிப்பாடல்கள் எனும் பெய ருடன் நூலாகவெளிவந்துள்ளன.

திரு. நடராசா அவர்கள் இப்பாடல்களை கவிகள், நாட்டுப்பாடல்கள் என இருபெரும் பிரிவுகளாக வகுத்துள்ளார். கவிகள் எனும் பிரிவில் மட்டக் களப்புப் பகுதியில் வழங்கிவரும் கிராமியக்கவிகள், காதலில் வளர்ந்த கவிகள், நாட்டுப்பாடல்களில் செறிந்திலங்கும் அகப்பொருள், காதலர் குறிப்பிடும் இரவுபகற்குறிகள் தன்காதலைத்தாய்க்குரைத்திய தலைவி, பிரிந்தகாதலர் பிரிவாற்றாதிரங்கல், உடன் போக்கு, கற்பைப்பேணும் தமிழகப் பெண்கள், சுவைமிகுந்தகவிகள் ஆகியவை அடங்கியுள்ளன. நாட்டுப்பாடல்கள் எனும் இரண்டாவது பிரிவில், தாய்தந்தையர் கொஞ்சுமொழிப்பாடல்கள், பிள்ளைக ளின் விளையாட்டுப்பாடல்களும் வேடிக்கைப் பாடல் களும், கலியாணப்பேச்சு, கும்மிப்பாடல்கள் நாட்டு மக்களின் ஊஞ்சற்பாடல்கள், சிருங்காரரசப் பாடல்கள், கப்பற்பாடல்கள், பள்ளுப்பாடல்கள், அரிவிவெட்டுப்பாடல்கள், ஏர்ப்பாடல்கள், பொலிப் பாடல்கள், சூடுமிதிப்பாடல்கள், கள்ளுப்பாடல், கலியாணப் பாடல்கள், நொண்டிச் சிந்து மீன் பிடி காரர் பாடல், அடுப்பங்கரைப்பாடல், பலதுறைப் பாடல் கள், தெம்மாங்கு, பறங்கியர் பற்றிய பாடல்கள், சத் திய வேதப்பாடல்கள் ஆரியவை அடங்கியுள்ளன.

சுவை நிறைந்த பாடல்கள் பலவற்றை வித்துவான் நடராசா தொகுத்து வெளியிட்டிருப்பது மகிழ்ச்சிக் குரியதே. எனினும் ஒரிடத்தில் வந்தபாடல் பிறிதோ ரிடத்திலும் இடம் பெற்றிருப்பதை அடுத்த பதிப்பில் ஒழுங்குபடுத்திக்கொள்வது நன்று. பறங்கியர்பாடலில்

சங்கானைச் சந்தையிலே—பறங்கியர் சுங்கானைப்
போட்டு விட்டார் என்ற பாடத்திலும் பார்க்க,
சுன்னாகச் சந்தையிலே–பறங்கியர்.
சுங்காணைப் போட்டு விட்டார்.

என்றபாடபேதமே பெரிதும் வழங்குகின்றது யாழ்ப் பாண வைபவகௌமுதியிலும் இப்பாடமே காணப்படு கின்றது. நாடோடிப் பாடல்களை வெளியிடுவோர் அவ் வப்பாடல்களைத்தமக்கு உதவியவர்களின் பெயர்களைக் குறிப்பிடுவதால், மேலும் நாடோடிப் பாடல்களைச் சேகரிப்பதற்கு உதவியாக இருக்கும். அன்றியும் நன்றிசெலுத்தும் கடப்பாடும் நிறைவேறியதாகும். ஊஞ்சலில் உல்லாசமாக ஆடிக்கொண்டிருக்கும் இள மங்கையையும் அவள் மீதுகடைக்கண் செலுத்தும் கட்டிளங்காளையினையும் சித்தரித்துக்காட்டும் அழகிய மூவர்ணச் சித்திரம் இந்நூலின் அட்டையை அலங் கரிக்கின்றது. வித்வான் நடராசா அவர்களின் முயற் சிக்கு ஊக்கமளிப்பது ஈழத்தமிழர்கடனாகும்.

---

தேவபாணி

(30ம் பக்கத் தொடர்)

எரியிலோ புனலிலோ சிதலிலோ மண்ணிலோ
இல்லாது போனவிறை நூல்
அங்கனுல கத்திலே நிலைநிற்க வருள்செய்த
அடிகளுனை நினையவருளாய் ;
ஐம்புலத் தொல்லைதபு செம்புலச் செல்வவிபு
லானந்த ஞானகுருவே
பாருக்கு ளேயண்ட ரமுதுக்கு நேரான
பைந்தமிழ்ப் பாடல்பொழியும்
பருவமுகி லேபரம கம்சர்தரு நெறியிலே
பத்திமிக வுடையவரசே !!
நேருக்கு வேறொருவ ரில்லாத தோன்றலே
நித்தியா னந்தவுருவே
நின்னையல தெங்களுக் கிவ்வுலகில் வேறியார்
நீங்காத பெருமைதருவார்
வீரர்க்குள் வீரனே பல்கலைக் கழகங்கள்
மேவிவிரி வுரை நிகழ்த்தும்
மெய்யறிவு நிறைகின்ற பொன்மணிப் பீடமே
விண்ணு றெழுந்தமதியே !!
ஆருக்கு நன்மைபுரி யறவனே ! துறவனே !!
அடிகளுனை நினையவருள்வாய்
ஐம்புலத் தொல்லைதபு செம்புலச் செல்வவிபு
லானந்த ஞானகுருவே
தேடும் மனச்செய்கை தமிழுக்கு மாண்டவன்
திருவடிக ளுக்குமாக்கிச்
செந்தாவி னற்செய்கை யினிமைசெறி விரிவுரைகள்
செய்யுட்டொ கைக்குமாக்கிக்
கூடுங்க ரச்செய்கை யறிவுமிளிர் கட்டுரை
கொளுத்துதற் காக்கியுடலைக்
கோதிலிறை வன்பணி தமிழ்ப்பணிக் காக்கிநீ
குவலய மதிக்கவாழ்ந்தாய் !
ஓடும்ப சும்பொன்னு மொக்கவே கருதுமெய்
யுணர்வுடைய தமிழரிறைவா
உன்னையல் லாலெமக் கினியெவர்க ளினியவர்கள் ?
உத்தமச் சித்தநிலையில்
ஆடும்பெ ருங்கூத்த னடியிணைகள் மறவாத
வடிகளுனை நினையவருள்வாய்
ஐம்புலத் தொல்லைதபு செம்புலச் செல்வவிபு
லானந்த ஞானகுருவே

## அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

## தமிழில் சட்ட சம்பந்தமான நூல்கள்

| | | விலை ரூ. ச. | தபாற் செலவு ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | அத்தியாயம் 60 கார்ச் சாரதிகள் சம்பந்தமான ஒழுங்குகள் ஏற்பாடு செய்வதற்கானதொரு கட்டளைச் சட்டம் .. .. | 0 10 | 0 10 |
| 2. | அத்தியாயம் 91—நொத்தாரிஸ்மார் சட்டம் .. .. | 1 30 | 0 35 |
| 3. | அதிகாரம் 95—கலியாணப் (பொதுச்) சட்டம் .. .. | 0 55 | 0 20 |
| 4. | (i) 1940 ம் ஆண்டின் 15 ம் இலக்க கலியாணப் பதிவுச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. ..<br>(ii) 1944 ம் ஆண்டின் 49 ம் இலக்க ஷை<br>(iii) 1945 ம் ஆண்டின் 20 ம் இலக்க ஷை ..<br>(iv) 1946 ம் ஆண்டின் 34 ம் இலக்க ஷை .. | 0 50 | 0 10 |
| 5. | அத்தியாயம் 104—தத்துவப் பத்திரங்கள் சட்டம் .. .. | 0 20 | 0 10 |
| 6. | அத்தியாயம் 115—வீட்டுப் பணியாளர் பதிவுக் கட்டளைச் சட்டம் .. | 0 30 | 0 10 |
| 7. | அத்தியாயம் 116—தொழிற் சங்கக் கட்டளைச் சட்டம் .. .. | 0 80 | 0 20 |
| 8. | அத்தியாயம் 120—வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டம் .. | 0 40 | 0 10 |
| 9. | அத்தியாயம் 198—கிராமச் சமுதாயச் சட்டத்தின் மறுபதிப்பு .. | 1 30 | 0 35 |
| 10. | 1947 ம் ஆண்டின் 17 ம் இலக்க கிராமச் சமுதாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. .. .. | 0 10 | 0 10 |
| 11. | 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்க இலங்கையிலே முடிக்குரிய காணியின் கிரமமான பண்படுத்துதலுக்காகவும் பராதீனப் படுத்துதலுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கான சட்டம் .. .. | 1 05 | 0 35 |
| 12. | 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்க கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவும் அதைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்குமான சட்டம் .. .. .. | 0 45 | 0 20 |
| 13. | 1939 ம் ஆண்டின் 32 ம் இலக்க பிரசவ உதவிப் பணக் கட்டளைச் சட்டம் | 0 30 | 0 20 |
| 14. | 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளச் சபைகள் சட்டம் .. | 1 10 | 0 35 |
| 15. | 1942 ம் ஆண்டின் 45 ம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் | 2 75 | 0 35 |
| 16. | 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்க ஒரு ஸ்தல அரசாங்க சேவையை அமைப்பது ஒழுங்குபடுத்துவது முதலிய ஏற்பாடுகள் செய்வதற்கான ஒரு சட்டம் .. .. .. | 0 40 | 0 10 |

**குறிப்பு.**—அரசாங்க வெளியீட்டு அலுவலக அத்தியட்சர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.